Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

இதழ் 48

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

11 ரபிய்யுல் அவ்வல் 1439 ஹிஜ்ரி கமரி 30 நுபுவ்வத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

30 நவம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அது எத்தகைய பாழடைந்த இரயில் நிலையமாக இருந்தது என்றால், அங்கு உட்கார்வதற்காக கட்டில் கூட கிடைக்கவில்லை. உணவிற்கான ஏற்பாட்டையும் அங்கு செய்ய முடியாத நிலை இருந்தது. ஆனால், முன்னறிவிப்பு நிறைவேறியதில் எனக்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்பட்டது என்றால், அந்த இடத்தில் எவரோ எங்களுக்கு பெரும் விருந்தளித்தது போன்று இருந்தது. ஒருவகையில் பார்க்கும்போது எல்லா வகையான சுவையான உணவுகளும் எங்களுக்குக் கிடைத்தது போன்று இருந்தது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**94 -வது அடையாளம்:** ஒரு முறை நான் லூதியானாவிலிருந்து காதியானுக்கு இரயில் வண்டியில் வந்து கொண்டிருந்தேன். என்னுடன் எனது ஊழியரான ஷேக் ஹாமிது அலி அவர்களும் வேறு சிலரும் இருந்தனர். நாங்கள் ஓரளவு தூரத்தைக் கடந்து வந்த பிறகு எனக்கு சிறு மயக்கம் ஏற்பட்டது. அத்துடன் نصف ترا نصف عماليق را அதாவது, பாதி உமக்கும்; பாதி உமது உறவினர்களுக்கும் உரியதாகும் என்ற இல்ஹாம் வந்தது. அத்துடன் இது வாரிசு என்ற நிலையில் கிடைக்க இருக்கின்ற பங்காகும். அதாவது, வாரிசாக இருக்கின்ற ஒருவரது மரணத்தால் அந்த பங்கு எங்களுக்கு கிடைக்கும் என்று உள்ளத்தில் இடப்பட்டது. அதாவது, உறவினர்கள் என்பதன் பொருள், என்னை எதிர்த்து வந்த உயரமாக இருக்கின்ற எனது சிறிய தந்தையின் மகன்களான எனது சகோதரர்கள் ஆவர் என்பதும் உள்ளத்தில் இடப்பட்டது. ஒரு வகையில் இறைவன் என்னை மூஸாவாகவும், அவர்களை மூஸாவின் எதிரிகளாகவும் குறிப்பிட்டுள்ளான். நான் காதியான் வந்து சேர்ந்ததும் எங்களது உறவினர்களில் ஒருவரான இமாம் பீபி என்ற பெயரையுடைய பெண் வயிற்றுப்போக்கின் காரணமாக நோய்வாய்ப்பட்டிருப்பது தெரிய வந்தது. அந்த பெண் சில நாட்களுக்கு பிறகு இறந்து விட்டார். மேலும், இரு பிரிவினர்களான எங்களை தவிர அவருக்கு வேறு வாரிசுகள் கிடையாது. அதனால், அவரது நிலங்களில் பாதிப் பகுதி எங்களது பங்கில் வந்தது. மீதியுள்ள பாதிப் பகுதி எனது சிறிய தந்தையின் மகன்களான எனது சகோதரர்களின் பங்கில் வந்தது. இவ்வாறு அந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. அது நிறைவேறியதற்கும் அது பற்றி நான் எடுத்துக் கூறியிருந்ததற்கும் ஒரு கூட்டம் சாட்சியாக இருக்கின்றது. மேலும், இப்போது உயிருடன் இருக்கின்ற ஷேக் ஹாமிது அலி அவர்களும் இதற்கு சாட்சியாக இருக்கின்றார்.

**95 -வது அடையாளம்:** ஒரு முறை தற்செயலாக எனக்கு லூதியானாவில் இருந்து பட்டியாலா செல்ல வேண்டியது வந்தது. பயணத்தில் என்னுடன் அதே ஷேக் ஹாமிது அலி அவர்களும், இரண்டாது நபராக ஹோஷ்யார்பூர் மாவட்டத்திலுள்ள டான்டாவை ஒட்டிய ஒரு கிராமத்தில் வசித்து வருகின்ற ஷேக் கான் என்ற பெயரையுடைய ஒருவரும், மூன்றாவது நபராக அம்பாலா இராணுவ மையத்தில் வசித்து வருகின்ற அப்துர் ரஹீம் என்ற பெயரையுடைய ஒருவரும், இப்போது எனது நினைவில் இல்லாத வேறு சிலரும் இருந்தனர். நாங்கள் இரயிலில் பயணம் செய்ய இருந்த அதிகாலை நேரத்தில் இந்த பயணத்தில் சில இழப்புகள் ஏற்படும் என்றும், சில சிரமங்கள் ஏற்படும் என்றும் எனக்கு இல்ஹாம் மூலமாக தெரிவிக்கப்பட்டது. நான் என்னுடன் பயணம் செய்த அனைவரிடமும் தொழுது துஆ செய்யுங்கள். ஏனென்றால், எனக்கு இந்த இல்ஹாம் வந்துள்ளது என்று கூறினேன். அனைவரும் துஆ செய்தனர். பிறகு நாங்கள் இரயிலில் பயணம் செய்து எல்லா வகையிலும் பாதுகாப்பாக பட்டியாலா வந்து சேர்ந்தோம். நாங்கள் இரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்ததும் அந்த பிரதேசத்தின் தலைமை அமைச்சரான கலீஃபா முஹம்மது ஹஸன் அவர்கள் ஏறக்குறைய பதினெட்டு வண்டிகளில் வந்திருந்த தமது பிரதேசத்தின் எல்லா உறுப்பினர்களுடன் எங்களை வரவேற்பதற்காக அங்கு வந்திருந்ததை நாங்கள் பார்த்தோம். இன்னும் முன்னால் சென்றதும் இந்நகரில் வசிக்கின்ற முக்கிய பிரமுகர்களும் பொதுமக்களுமான ஏறக்குறைய ஏழாயிரம் பேர் எங்களை சந்திப்பதற்காக அங்கு வந்திருந்ததைப் பார்த்தோம். இதுவரை நலமாக எல்லா விஷயங்களும் நடந்தன. எந்த இழப்பும் சிரமமும் ஏற்படவில்லை. ஆனால், திரும்பி வருவதற்கு நான் எண்ணியபோது அதே அமைச்சர் அவர்கள் அந்த நாட்களில் கவுன்சிலின் உறுப்பினராக இருந்து வந்த தமது சகோதரரான ஸய்யிது முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களுடன் என்னை இரயிலில் ஏற்றி வழியனுப்பி வைப்பதற்காக இரயில் நிலையத்திற்கு என்னுடன் வந்தார்கள். மேலும், அவர்களுடன் ஜெஹ்ஜரைச் சார்ந்த மர்ஹூம் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களும் இருந்தார்கள். நாங்கள் இரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்ததும் இரயில் புறப்படுவதற்கு கொஞ்சம் நேரம் இருந்ததால் அங்கேயே அஸ்ர் தொழுகையை தொழ நான் எண்ணினேன். எனவே, நான் அணிந்திருந்த மேலாடையைக் கழற்றி விட்டு நான் உளூ செய்ய விரும்பினேன். மேலாடையை அமைச்சர் அவர்களின் கீழ் வேலை பார்த்து வந்த ஒருவரிடம் கொடுத்தேன். அதற்கு பிறகு மேலாடையை அணிந்து விட்டு தொழுதேன். அந்த மேலாடையில் பயணச் செலவிற்காக கொஞ்சம் தொகை இருந்தது. அதிலிருந்துதான் பயணச் சீட்டுக்கான தொகையையும் கொடுக்க வேண்டியதிருந்து. பயணச் சீட்டு எடுப்பதற்கான நேரம் வந்ததும் பயணச் சீட்டிற்கான தொகையை வழங்குவதற்காக நான் சட்டைப் பையில் கையை விட்டுப் பார்த்தபோது, எந்த கைகுட்டையில் நான் பணத்தை வைத்திருந்தேனோ அது தொலைந்து விட்டது எனக்கு தெரிய வந்தது. மேலாடையைக் கழற்றியபோது அது எங்காவது விழுந்திருக்கும் என்று தெரிகிறது. ஆனால், எனக்கு இதனால் துன்பத்திற்குப் பகரமாக முன்னறிவிப்பின் ஒரு பகுதி நிறைவேறியதில் மகிழ்ச்சி ஏற்பட்டது. பிறகு, நாங்கள் பயணச் சீட்டிற்கான ஏற்பாட்டை செய்து இரயிலில் பயணமானோம். நாங்கள் தோராபே இரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்த போது இரவு பத்து மணியாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். அங்கு ஐந்து நிமிடம் மட்டுமே இரயில் நின்றது. என்னுடன் பயணம் செய்த வந்த ஷேக் அப்துர் ரஹீம் அவர்கள் ஒரு ஆங்கிலேயரிடம் லூதியானா வந்து விட்டதா ? என்று கேட்டார். அந்த ஆங்கிலேயர் தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடனோ அல்லது தனது வேறு ஏதாவது சுய நோக்கத்துடனோ ஆம்; வந்து விட்டது என்று பதில் கூறினார். அப்போது நாங்கள் எங்களது பொருட்களுடன் விரைவாக கீழே இறங்கி வந்தோம். இரயில் புறப்பட்டுச்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

உங்களின் குறிக்கோள் எப்பொழுதும் فَاسۡتَبِقُوا الۡخَيۡرٰتِ ஆக இருக்க வேண்டும் என அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் கூறுகின்றான். அதாவது, நீங்கள் நன்மைகளில் எப்பொழுதும் ஒருவர் மற்றவரை முந்திச் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள். (2:149) அடுத்து நன்மைகள் செய்யக் கூடியவர்களை அல்லாஹ் சிறந்த படைப்பினம் என்று கூறியிருக்கின்றான்.

---

நன்மை என்பது என்ன? உண்மையான நன்மையை எப்படி பெற முடியும்? நன்மைகள் செய்வதற்கு இறைவன் மீதான நம்பிக்கை ஏன் அவசியம்? ஈமானின் தரம் என்னவாக இருக்க வேண்டும்? அந்த ஈமானிய தரத்தை நாம் எவ்வாறு அதிகரிக்க வேண்டும்? எந்த வழிமுறைகளின் மூலமாக நன்மைகள் செய்யப்பட முடியும்? நன்மைகளின் என்னென்ன அம்சங்கள் உள்ளன? எத்தனை வகையான நன்மைகள் உள்ளன? ஒரு நம்பிக்கையாளருக்கு நன்மைகளின் வட்டத்தை எந்த அளவிற்கு பரந்ததாக ஆக்க வேண்டும்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு விவரித்துக் கூறியுள்ளார்கள்.

---

நன்மைகளின் உண்மையான நிலை, அது பற்றிய ஞானம், அதன் ஆன்மா ஆகியவற்றைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் இறைஞானமிக்க விஷயங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

---

ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய ஹாமிது மக்ஸூது ஆதிஃப் சாஹிப், தன்ஸானியா ஜமாஅத்தின் முன்னாள் அமீரான மதிப்பிற்குரிய அலி சயீதி மூஸா சாஹிப், ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய நுஸ்ரத் ஜஹான் சாதிகா சாஹிபா ஆகியோர் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**27 அக்டோபர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **27 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

உங்களின் குறிக்கோள் எப்பொழுதும் فَاسۡتَبِقُوا الۡخَيۡرٰتِ ஆக இருக்க வேண்டும் என அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் கூறுகின்றான். அதாவது, நீங்கள் நன்மைகளில் எப்பொழுதும் ஒருவர் மற்றவரை முந்திச் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள். **(2:149)** அடுத்து நன்மைகள் செய்யக் கூடியவர்களை அல்லாஹ் சிறந்த படைப்பினம் என்று கூறியிருக்கின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّ الَّذِيۡنَ اٰمَنُوۡا وَعَمِلُوا الصّٰلِحٰتِ ۙ اُولٰٓـئِكَ هُمۡ خَيۡرُ الۡبَرِيَّةِ

அதாவது, நிச்சயமாக நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றக்கூடிய மக்களே சிறந்த படைப்பினம் ஆவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்விஷயத்தை விளக்கியவாறு சுருக்கமாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''மனிதன் தனது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். மேலும் நற்செயல்களில் முன்னேற்றம் காண வேண்டும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 15; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

மேற்கண்ட வசனத்தின் ஒளியில் அன்னார் இதனைக் கூறியுள்ளார்கள். எனவே, நற்செயல் –களில் முன்னேறுவது, நல்ல பணிகளை செய்வது, நன்மைகளை மேற்கொள்வது ஆகிய விஷயங்களே ஒரு முஸ்லிமை உண்மையான நம்பிக்கையாளராக ஆக்குகின்றது. இதற்காக நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக விரிவாக இது தொடர்பாக நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். உதாரணமாக, நன்மை என்பது என்ன? உண்மையான நன்மையை எப்படி பெற முடியும்? நன்மைகள் செய்வதற்கு இறைவன் மீதான நம்பிக்கை ஏன் அவசியம்? ஈமானின் தரம் என்னவாக இருக்க வேண்டும்? அந்த ஈமானிய தரத்தை நாம் எவ்வாறு அதிகரிக்க வேண்டும்? எந்த வழிமுறைகளின் மூலமாக நன்மைகள் செய்யப்பட முடியும்? நன்மைகளின் என்னென்ன அம்சங்கள் உள்ளன? எத்தனை வகையான நன்மைகள் உள்ளன? அடுத்து அல்லாஹ் நன்மை செய்யக் கூடியவர்களுக்கு அந்த நன்மைகளுக்கு எவ்வாறு நற்கூலி வழங்குகின்றான்? மேலும் நன்மையான ஆகுமான விஷயங்களைக் கூட நடுநிலையாக பயன்படுத்துவதே நற்செயல் ஆகும். வரம்பு மீறி விட்டால் அது நன்மையை குறைத்து விடும். ஒரு நம்பிக்கையாளருக்கு நன்மைகளின் வட்டத்தை எந்த அளவிற்கு பரந்ததாக ஆக்க வேண்டும்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு விவரித்துக் கூறியுள்ளார்கள்.

சுருக்கமாக, அன்னார் நன்மைகளின் நுட்பத்தையும், அதனுடைய உண்மைத்துவம் மற்றும் அதன் ஆன்மா பற்றிய கருத்தையும் பல்வேறு கோணங்களில் பல்வேறு இடங்களில் எடுத்துரைத்துள்ளார்கள். தற்போது அது தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை நான் எடுத்துரைப்பேன். நன்மை என்பது என்ன? என்பதை விவரித்தவாறு வெளிப்படையில் ஒரு சிறிய நன்மை அல்லாஹ்வின் திருப்தியை எப்படி பெற்றுத் தந்து விடுகின்றது என்பதையும் எடுத்துரைத்தவாறும் அன்னார் கூறுகின்றார்கள்:

நன்மை என்பது இஸ்லாம் மற்றும் இறைவனை நோக்கி முன்னேறுவதற்குரிய ஓர் ஏணிப்படி ஆகும். இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை அறிய வேண்டுமென்றால் அல்லாஹ்வின் திருப்தியை பெற வேண்டுமென்றால் அவனது நெருக்கத்தை பெற வேண்டுமென்றால் நன்மைகள் அதற்கான ஏணியாகும். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். நன்மை என்பது என்ன? மனிதனை ஷய்த்தான் எப்போதும் பின் தொடர்கின்றான். மனிதர்களை அவன் நேர்வழியிலிருந்து விலக்குகின்றான்.

உதாரணமாக, இரவில் ரொட்டி அதிகமாக சமைக்கப்பட்டு விட்டது. செல்வந்தராக ஒருவர் இருக்கின்றார். அவருடைய வீட்டில் உணவு அதிகமாக சமைக்கப்பட்டு விட்டது. அது இரவில் எஞ்சியும் விட்டது. இரவில் அது சாப்பிடப் –படாததால் எஞ்சி, கெட்டு விட்டது. மறுநாள் உணவு வேளையில் அவருக்கு முன் அறுசுவை உணவு வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு கவளம் அதிலிருந்து அவர் உண்ணவில்லை. அந்த சமயத்தில் வீட்டு வாசலில் பிச்சைக்காரன் குரல் எழுப்பி சாப்பாடு கேட்கின்றான். அதுபோன்ற சந்தர்ப்பத்தில் அந்த செல்வந்தர் கெட்டுப்போன ரொட்டியை பிச்சைகாரனுக்கு கொடுத்து விடு என்று கூறுகின்றார். நேற்று இரவு எஞ்சிய அந்த ரொட்டியைக் கொடு என்று குடும்பத்தினரிடம் கூறுகின்றார். ஆனால் அவர் முன்னிலையில் புதிதாக சமைக்கப்பட்ட உணவு வைக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இது நன்மையாகி விடுமா? கெட்டுப் போன ரொட்டியை அவர் உண்டிருக்க மாட்டார்.

அல்லாஹ் கூறுகின்றான்.

وَيُطۡعِمُوۡنَ الطَّعَامَ عَلٰى حُبِّهٖ مِسۡكِيۡنًا وَّيَتِيۡمًا وَّاَسِيۡرًا அதாவது, விருப்பமான நல்ல உணவிற்கு பெயர்தான் அரபியில் 'தஆம்' ஆகும். கெட்டுப் போன காய்ந்த உணவு 'தஆம்' என்று ஆகி விடாது. நீங்கள் உங்களுக்கு விரும்பாத உணவை அரபியில் 'தஆம்' என்று கூற மாட்டார்கள். அந்த செல்வந்தர் வீட்டில் சுடச்சுட புதிதாக சமைக்கப்பட்ட உணவு வைக்கப்பட்டிருந்தது. உணவை சாப்பிடக்கூட அவர் ஆரம்பிக்கவில்லை. பிச்சைக்காரனின் குரல் கேட்டு அதிலிருந்து அவர் கொடுத்திருந்தால் அது நன்மையாக இருந்திருக்கும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 75; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

நம்முன் புத்தம்புது உணவு வைக்கப்பட்டு பிச்சை எடுப்பவர் அந்த தருணத்தில் வந்து நம்மிடம் யாசித்தால் அவருக்கு நாம் கொடுத்து விடுவதுதான் நன்மையாகும். நல்ல ருசியான உணவை நாம் உண்டு விட்டு வீட்டிலுள்ள எஞ்சிய கெட்டுப் போன உணவை பிச்சைக்காரனுக்கு கொடு என்று கூறுவது நன்மையாகாது.

இந்த அளவிற்கு ஆழம் வரை மனிதன் செல்லும் போது தான் அவனால் உண்மையான

நன்மையை பெற முடியும். எனவே, உண்மையான நன்மையை மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இந்த நன்மை எப்படி பிறக்கும்? இந்த நன்மை என்பது இறைவன் மீதான முழுமையான நம்பிக்கை இல்லாமல் ஒருவரிடம் ஏற்பட முடியாது.

இதனை விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: உண்மையான நன்மையை மேற்கொள்வதற்கு இறைவன் மீதான நம்பிக்கை ஒருவருக்கு இருப்பது அவசியமாகும். ஏனென்றால், வெளிப்படையான நபருக்கு ஒருவர் வீட்டினுள் என்ன செய்கின்றார் என்பது தெரியாது. திரை மறைவில் எவருடைய செயல் என்னவாக இருக்கின்றது என்பது எவருக்கும் தெரியாது? அல்லாஹ்வின் இருப்பின் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையும் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்றால் அல்லாஹ்வின் பார்வை ஒவ்வொரு விஷயத்தின் மீதும் உள்ளது என்ற நம்பிக்கை இருக்க வேண்டும்.

வெளிப்படையான அதிகாரிகளுக்கு அல்லது மக்களுக்கு வீட்டினுள் நடப்பது தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் அல்லாஹ் அறிந்தவனாக இருக்கின்றான். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான் என்ற ஈமான் மனிதனுக்கு இருக்க வேண்டும். அல்லாஹ் மறைவானவற்றை அறிந்தவனாக இருக்கின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவர் வாயினால் தன்னை நல்லவர் என்று கூறிக் கொள்ளலாம். ஆனால், எமது கேள்வி கணக்கைப் பற்றி அவரது உள்ளத்தில் அச்சமில்லையென்றால் அவரது வாதம் தவறானதாகும். உலக அரசாங்கங்களின் அச்சம் மனிதனுக்கு இரவிலும், பகலிலும், ஒளியிலும், இருளிலும், தனிமையிலும், சபையிலும், ஊரிலும், வனாந்தரத்திலும் எல்லா நிலையிலும் இருக்கவே செய்கின்றது. சில முறை மனிதன் ஒளிந்து பணி செய்யக் கூடியவனாக இருக்கின்றான். மனிதன் பல்வேறு இடங்களில் இருக்கின்றான். பல்வேறு நிலைகளில் இருக்கின்றான். வெளிப்படையில் என்னை யாரும் பார்க்கவில்லை என்று அவன் கருதுகிறான். எனவே அவனுக்கு அச்சமும் இருப்பதில்லை. அந்த அச்சம் இல்லாததன் விளைவாக அவன் தவறான பணிகளை செய்து விடுகின்றான். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அதனை அறிவதில்லை. அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக இருக்கின்றான். உண்மையான நன்மையை செய்ய வேண்டுமென்றால் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை மிகவும் அவசியமாகும்.

அதே போன்று அன்னார் கூறினார்கள்: ஒழுக்கங்களை சரி செய்து கொள்வதற்கும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை அவசியமாகும். அவன் எல்லா நிலையிலும் எல்லா நேரத்திலும் கண்காணிப்பாளனாகவும் மனிதனது செயல் –களையும் மனிதனது உள்ளத்திலுள்ள இரகசியங் –களையும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான். (மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 313; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அப்படிப்பட்டவனாக இருக்கும் அல்லாஹ்வை தவிர வேறு எவரும் இல்லை. இந்த தரத்திலான ஈமான் இருக்குமென்றால் எப்போதும் அல்லாஹ்வின் மீதான நினைவு இருக்கும் என்றால் அப்போது தான் மனிதனால் உண்மையான நன்மையைச் செய்ய முடியும்.

அடுத்து உண்மையான நன்மை பற்றி மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தக்வாவின் பொருள் என்னவென்றால் தீமையின் நுட்பமான வழிகளிலிருந்து கூட விலகி நிற்பதாகும். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். இது மட்டுமே நன்மையாகி விடாது. ஒரு மனிதர் நான் நல்லவராவேன். ஏனென்றால் நான் எவருடைய செல்வத்தையும் பறிக்கவில்லை. தவறான வழியில் சம்பாதிக்கவில்லை. வழிப்பறியில் ஈடுபடவில்லை. திருடவில்லை. தீய பார்வையுடன் எவரையும் பார்க்கவில்லை. விபச்சாரம் செய்யவில்லை என்று கூறுகின்றார் என்றால் இதுபோன்ற நன்மைகள் இறைஞானம் உடையவர்களுடைய பார்வையில் நகைப்பிற்குரியதாகும். ஏனென்றால் இந்த தீமைகளைச் செய்தால், திருடினால், கொள்ளையடித்தால் அவர் அதற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வார்.

எனவே, இவை இறைஞானமுடையவருடைய பார்வையில் மதிக்கத்தக்க நன்மையல்ல. இன்னும் சொல்லப்போனால், உண்மையான நன்மை என்பது மனித இனத்திற்கு தொண்டாற்றுவதாகும். மேலும் அல்லாஹவின் வழியில் முழுமையான உண்மை மற்றும் நன்றியுணர்வை வெளிப்படுத்துவதாகும். மேலும் அவனது வழியில் உயிரையும் மாய்த்துக் கொள்வதற்கு தயாராகி விடுவதாகும்.

எனவேதான் அல்லாஹ் கூறினான்.
إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوا وَّالَّذِينَ هُم مُّحْسِنُونَ அதாவது, அல்லாஹ் தீமையிலிருந்து விலகி இருந்து நன்மையை செய்பவர்களுடன் இருக்கின்றான். **(16:129)** நன்றாக நினைவில் கொள்ளுங்கள். வெறும் தீமையிலிருந்து விலகி இருப்பது மட்டும் எந்த சிறப்பும் அல்ல. நான் தீமை செய்வதில்லை. நான் மிகவும் நல்லவனாவேன் என்று கூறுவது ஒன்றும் சிறப்பல்ல. எதுவரை அத்துடன் நன்மை செய்வதில்லையோ அதுவரை அது சிறப்பிற்குரியது அல்ல.

பலர் உள்ளனர். அவர்கள் ஒருபோதும் விபச்சாரம் செய்ததில்லை. கொலை செய்ததில்லை. திருடியதில்லை. கொள்ளை அடித்ததில்லை. ஆயினும் அல்லாஹ்வின் வழியில் உண்மை மற்றும் நன்றியுணர்விற்கான எந்த முன்மாதிரியையும் அவர்கள் வெளிப்படுத்தியதில்லை. அல்லாஹ்வின் திருப்திக்காக அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்பட்டவாறு எந்த நன்மையும் செய்ததில்லை. எந்த தியாகமும் செய்ததில்லை. அவர்கள் எந்த தீமையும் செய்யவில்லை என்பது இருக்கட்டும். மனித இனத்திற்கு தொண்டாற்றவில்லை என்றால் அவர் அல்லாஹ்விற்குரிய உரிமையையும் செலுத்தவில்லை. படைப்பினங்களுக்குரிய உரிமையையும் செலுத்தவில்லை. இவ்வாறு அவர் எந்த நன்மையையும் செய்யவில்லை. நிச்சயமாக அவர் பல தீமைகளிலிருந்து விலகி இருந்தார் என்பது உண்மைதான். ஆயினும் அவர் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்கவில்லை என்றால், மனித இனத்திற்கு தொண்டாற்ற –வில்லையென்றால் அவரது நிலை நன்மையின் நிலையாக இருக்காது.

எனவே, இதுபோன்ற விஷயங்களை முன்னிறுத்தி எவர் தன்னை நல்லவராக காட்டிக் கொள்கிறாரோ அவர் அறிவீனர் ஆவார். ஏனென்றால் இது தவறான எண்ணமாகும். இந்த எண்ணத்தால் மட்டும் அவர் இறைநேசராக ஆகி விட முடியாது. (மல்.ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 241-242; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

மேலும், நான் விபச்சாரம் செய்ததில்லை. அல்லது கொலை செய்ததில்லை அல்லது திருடியதில்லை என்ற விஷயங்களால் மட்டும் ஒருவர் மகிழ்ச்சியடைவது பெருமைக்குரிய விஷயமல்ல. இதில் என்ன சிறப்பு உள்ளது? தீய விஷயங்களிலிருந்து விலகி இருப்பது மட்டும் சிறப்பு இல்லை. நான் எந்த தீமையும் செய்ததில்லை என்று கூறுவது பெரிய விஷயமல்ல. ஏனென்றால் உண்மையில் அவர் நன்கு அறிவார். நான் திருடினால் எனது கைகள் வெட்டப்படும். அல்லது நாட்டின் சட்டத்திற்கேற்ப எனக்கு தண்டனை வழங்கப்படும் என்பதை அவர் நன்கறிவார். நான் திருடி பிடிபட்டு விட்டால் தண்டனை வழங்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்படுவேன் என்பதை அவர் அறிவார். எனவே இது ஒன்றும் சிறப்பிற்குரிய செயல் அல்ல. அவருக்கு தண்டனை பற்றிய அச்சம் உள்ளது. எனவேதான் அவர் திருடவில்லை. தீய பணிகளிலிருந்து விலகி இருப்பது மட்டும் இஸ்லாத்தின் பார்வையில் நன்மையல்ல. எதுவரை தீமைகளை கைவிட்டு விட்டு நன்மைகளை செய்வதில்லையோ அதுவரை ஒருவர் இந்த ஆன்மீக வாழ்வில் உயிருடன் இருக்க முடியாது. தனது ஆன்மீகத்தில் முன்னேறுவது இஸ்லாமிய போதனைகளின் உண்மைத்துவம் ஆகும். தனது ஆன்மீக நிலையை மேம்படுத்த வேண்டும். வெறும் தீமைகளை கைவிட்டு விடுவதால் ஆன்மீக வாழ்வு சிறப்பாக முடியாது. தீமைகளை விட்டு விலகி நன்மைகளைச் செய்வது அவசியமாகும். அதன் மூலமே ஆன்மீக வாழ்க்கையை பெற முடியும். இல்லையென்றால் அவரால் ஆன்மீக வாழ்வில் உயிருடன் இருக்க முடியாது. அவர் மரணித்தவர் ஆகி விடுவார்.

நன்மை என்பது உணவாக உள்ளது. ஒரு நபர் உணவின்றி உயிர் வாழ முடியாதது போல நன்மையின்றி அவரால் ஆன்மீக வாழ்வில் உயிருடன் இருக்க முடியாது. இந்த நிலை ஈமானில் முன்னேறும்போதுதான் மனிதனுக்கு கிடைக்க முடியும். இறைவன் மீது மனிதனின் ஈமானின் தரம் எப்படி இருக்க வேண்டும் ? இந்த தரம் மனிதனின் அகமும், புறமும் ஒன்றாக இருக்கும் போதுதான் அவனுக்கு கிடைக்க முடியும். வெளிப்படையான ஈமான் மட்டும் போதுமானதல்ல. மாறாக, எப்படி ஒரு விஷம் மனிதனை பாதிக்கின்றதோ அதை உண்டால் நான் மரணித்து விடுவேன் என்ற உறுதி மனிதனுக்கு இருக்குமோ அதுபோன்ற உறுதி மனிதனுக்கு இறைவன் மீது இருக்க வேண்டும். அதே போன்று பாம்பின் புற்றில் கைவிட்டால் பாம்பு உள்ளே இருந்தால் கொட்டி விடும் என்ற உறுதி மனிதனுக்கு இருக்கும். அதே போன்று அல்லாஹ்வின் இருப்பின் மீதும் மனிதனுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்.

நான் தீமைகள் செய்தால் என்னை இறைவன் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவன் எனக்கு தண்டனை வழங்கி விடுவான்

என்ற நம்பிக்கை மனிதனுக்கு இருக்க வேண்டும். நன்மைகளுக்கு நற்கூலி வழங்குவதாக அல்லாஹ் கூறியிருக்கின்றான். இந்த நம்பிக்கை மனிதனுக்கு இருக்க வேண்டும். மனிதனுடைய ஒவ்வொரு செயலிலும் இறைவன் வெளிப்பட வேண்டும். எப்போதும் இறைவன் எனது ஒவ்வொரு பணிகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வு மனிதனிடம் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அகமும், புறமும் ஒன்றாக இருக்கின்ற நபர்தான் நல்லவராவார். எவருடைய உள்ளமும், புறமும் ஒன்றாக இருக்கின்றதோ அவர் பூமியில் மலக்குகளைப் போன்று நடப்பவராவார். உள்ளதிலுள்ளதுதான் நாவிலும் இருக்கிறது என்றால் ஒருவருடைய அகமும், புறமும் ஒன்றாக இருக்குமென்றால் அவருடைய நன்மையின் தரம் அவரை வானவராக ஆக்கி விடுகின்றது. நாத்திகர்கள் உண்மையான நன்மையை பெறுகின்ற போதனையின் கீழில்லை. நிச்சயமாக அவர்களுடைய ஒழுக்கங்கள் சரியானதாக இருக்கலாம். ஆனாலும் அவர்களால் இந்த தரத்தை அடைய முடியாது. ஏதாவதொரு வகையில் அவர்களது உள்ளத்தில் கோணலான எண்ணங்கள் வந்து விடவே செய்யும். அவர்கள் ஒருவேளை சில தீமைகளிலிருந்து கூட விலகி இருக்கலாம். சில நன்மைகளைக் கூட செய்து விடலாம். ஆயினும் அவர்களின் நிலைகள் பலவீனமானவையாகவே இருக்கும்.

அன்னார் கூறினார்கள்: எல்லா விளைவுகளும் ஈமான் மூலமாகவே வெளிப்படுகின்றன. உதாரணமாக, பாம்பின் புற்றை அறிந்து எவரும் அதில் கைவிடுவதில்லை. விஷம் நம்மை மாய்த்து விடும் என்று விஷத்தின் விளைவை நாம் அறிந்திருக்கின்றோம். இதன் விளைவாக நாம் அதனை ஒருபோதும் அருந்த மாட்டோம். இதன் மூலம் மரணிப்பதிலிருந்து தப்பித்து விடுவோம். (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 313-314; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

உறுதியான ஈமான் தொடர்பாக மேலும் விவரித்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: அனைத்து நன்மைகள் மற்றும் பரிசுத்தத்தின் வேர் என்பது இறைவன் மீதான நம்பிக்கையாகும். எந்த அளவிற்கு இறை நம்பிக்கையில் மனிதனிடம் பலவீனம் இருக்குமோ அதே அளவில் அவனது நற்செயல்களிலும் பலவீனம் இருக்கும். ஆனால் ஈமான் உறுதியாக இருக்குமென்றால் இறைவனுடைய அனைத்து பண்புகளின் மீதும் நம்பிக்கை கொள்ளப்பட்டால் அதே அளவிலான அற்புதமான மாற்றங்கள் மனிதனின் செயல்களில் வெளிப்படு –கின்றன. அல்லாஹ் அனைத்து ஆற்றல்களின் அதிபதி ஆவான். அவன் மறைவானவற்றை நன்கு அறிந்தவனாவான். எல்லா இடங்களிலும் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற நம்பிக்கை மனிதனுக்கு இருக்குமென்றால் இதன் மூலம் ஓர் அற்புதமான மாற்றம் மனிதனின் நற்செயல்களில் ஏற்பட்டு விடும். தானாகவே நல்ல அமல்கள் அவனிடம் வெளிப்படத் தொடங்கி விடும். தீமைகளுக்கு பதிலாக நன்மைகளின் பக்கம் அவனுக்கு அதிக கவனம் ஏற்பட்டு விடும். இறைவன் மீது நம்பிக்கை கொள்ளக் கூடியவர் பாவம் செய்பவராக இருக்க முடியாது. ஒரு பக்கம் இறைவன் மீது நம்பிக்கையும், மற்றொரு பக்கம் அவர் பாவம் செய்யக் கூடியவராகவும் இருக்க முடியாது. ஏனென்றால் இந்த ஈமான் மனிதனது இச்சைகளையும், பாவத்தின் எண்ணங்களையும் முறித்து விடுகின்றது.

பாருங்கள்! ஒருவருடைய கண்கள் பறிக்கப்பட்டு விட்டால் அவர் கண்களால் எப்படி தீய பார்வையை செலுத்த முடியும். கண்களால் எப்படி பாவம் செய்ய முடியும்? அதே போன்று கைகள் வெட்டப்பட்டு விட்டால் கைகளால் செய்யப்படுகின்ற பாவங்களை அவரால் எவ்வாறு செய்ய முடியும்? முற்றிலும் இதே போன்று மனிதன் நஃப்ஸே முத்மயின்னா அதாவது சாந்தியடைந்த ஆன்மா எனும் நிலையை அடைந்து விடும்போது அவனது கண்கள் குருடாகி விடுகின்றது. அத்தகைய நபரின் கண்களுக்கு பாவம் செய்யும் திறன் இருக்காது. அவர் பார்த்தாலும் ஒரு வகையில் பார்க்க மாட்டார். அதாவது அவர் தீய பார்வையுடன் எதனையும் பார்க்க மாட்டார். ஏனென்றால் கண்களின் பாவத்திற்கான ஆற்றல் அந்நிலையில் செயலிழந்து விடும். அதாவது அசுத்தம், பேராசை என்ற பார்வை. அல்லது ஆகுமற்ற விஷயங்களுக்கான பார்வை முற்றிலும் இல்லாமல் போய் விடும். அவர் காது இருந்தாலும் செவிடராகவே இருப்பார். பாவத்திற்குரிய விஷயங்களை அவரால் கேட்க முடியாது.

அதே போன்று அவரது அனைத்து மன இச்சைகள் மற்றும் ஆபாச உணர்வுகள் மற்றும் அதற்கான உள்ளார்ந்த ஆற்றல்கள் மேலும் என்னென்ன ஆற்றல்களால் பாவங்கள் வெளிப்படுமோ அவற்றின் மீது ஒரு வகையிலான மரணம் நிகழ்கின்றது. அவர் முற்றிலும் ஒரு மய்யத்தைப் போன்று ஆகி விடுகின்றார். அவர் இறை திருப்தியை முற்றிலும் பின் தொடரக் கூடியவராக இருப்பார். அதைத் தவிர்த்து அவர் ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாது. இறைவன் மீது உண்மையான ஈமான் இருக்கும் போது தான் இந்த நிலை மனிதனிடம் ஏற்படும். அல்லாஹ்வின் மீது உண்மையான நம்பிக்கை இருக்கும் போது இந்த அனைத்து நிலைமைகளும் மனிதனிடம் உருவாகி விடும். அதன் விளைவாக அவருக்கு முழுமையான அமைதி வழங்கப்படும்.

இந்தவொரு நோக்கம் மட்டுமே மனிதனது அசல் நோக்கமாக இருக்க வேண்டும். இந்த குறிக்கோளை நாம் நம்முன் நிறுத்த வேண்டும். எல்லா வகையான அசுத்தங்களையும் நமது மூளைகளிலிருந்தும் நமது எண்ணங்களில் இருந்தும், கண்களிலிருந்தும், காதுகளிலிருந்தும் வெளியேற்றியும் விட வேண்டும். அதிலிருந்து விலகியும் இருக்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: முழுமையான அமைதியை பெறுவதற்கு முழுமையான ஈமான் அவசியமாகும். இந்த நிலையை அடைய நமது ஜமாஅத் முயற்சி செய்ய வேண்டும். எனவே நமது ஜமாஅத்தின் முதல் கடமை என்னவென்றால், அல்லாஹ்வின் மீது முழுமையான ஈமானை பெற வேண்டும். (மல்∴பூஸாத் தொகுதி 6 பக்கம் 244-245; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) இந்த இலக்கையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கி –யுள்ளார்கள். இந்த நிலை ஏற்பட்டு விட்டால் நம்மிடம் நன்மைகளும் வெளிப்படும். நன்மைகளில் முந்தக்கூடிய கூட்டத்தைச் சார்ந்தவர்களாகவும் நாம் ஆகி விடுவோம். அப்போதுதான் சிறந்த படைப்பினங்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆகி விடுவோம்.

நன்மைகளின் அம்சங்களை விவரித்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: மனிதனுக்கு இரண்டு விஷயங்கள் அவசியமானவையாகும். ஒன்று, தீமையிலிருந்து விலக வேண்டும். மற்றொன்று, நன்மையின் பக்கம் ஓட வேண்டும். நன்மையின் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, தீமையை கைவிடுவது. இரண்டாவது, நன்மைகளை மேற்கொள்வது. தீமைகளை கைவிடுவது ஒரு நன்மைதான். இது ஓர் அம்சமாகும். இரண்டாவது அம்சம் என்பது நன்மைகளை மேற்கொள்வதாகும். தீமைகளிலிருந்து விலகுவதால் மட்டும் மனிதன் முழுமையானவனாக ஆக முடியாது. தீமைகளை மட்டும் கைவிடுவது முழுமையான நிலை அல்ல. ஈமானிலும் பலவீனம் இருக்கும். அத்துடன் அவர் நன்மைகளையும் மேற்கொள்பவராக இருக்க வேண்டும். அதாவது மற்றவருக்கும் நன்மை பயப்பவராக அவர் இருக்க வேண்டும். நன்மை செய்து பிறருக்கு பயன் சேர்க்கும்போதுதான் ஈமான் முழுமையானதாக இருக்கும்.

இதிலிருந்தே ஒரு மனிதன் தன்னுள் எந்த அளவிற்கு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளான் என்பது தெரிய வரும். இறை பண்புகளின் மீது மனிதனுக்கு நம்பிக்கை இருக்கும் போதும், அதைப் பற்றிய அறிவும் மனிதனுக்கு இருக்கும்போதுதான் இந்த அந்தஸ்த்துகள் கிடைக்க முடியும். இந்த விஷயங்கள் மனிதனிடம் ஏற்படாத வரை

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

மனிதனால் தீமையிலிருந்து தப்பிக்கவே முடியாது. அல்லாஹ்வின் பண்புகளை அறிந்து கொள்வதற்கு மனிதன் எப்போதும் திருக்குர்ஆனை ஓதி வர வேண்டும். அதன் கட்டளைகளையும் படித்து வர வேண்டும். மற்றவர்களுக்கு நன்மை பயப்பது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அரசர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் மனிதன் அஞ்சுகின்றான். பெரும்பாலான மக்கள் அவர்களின் சட்டங்களை மீறுவதில்லை. அவ்வாறிருக்க ஆட்சியாளர்களில் சிறந்த ஆட்சியாளனாகிய அல்லாஹ்வின் கட்டளைகளை மீறுவதில் மனிதனுக்கு எவ்வாறு தைரியம் வருகின்றது? இதற்கு வேறு ஏதானும் காரணம் இருக்கின்றதா? அவன் மீது ஈமான் இல்லை என்பதைத் தவிர்த்து அதற்கு வேறு ஏதும் காரணமில்லை. ஈமானில் பலவீனம் இருக்கின்றது. எனவேதான் அவன் சட்டத்தை மீறுகின்றான்.

அன்னார் கூறினார்கள்: தீமைகள் செய்வதற்கும் நன்மைகள் செய்யாமல் இருப்பதற்கும் இதுவே ஒரு காரணமாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஈமானில் பலவீனம் ஏற்படும் போதே அமல்களிலும் பலவீனம் ஏற்படுகின்றது. அல்லாஹ்வை அலீம் ஆகவும், ஆலிமுல் கைஃப் ஆகவும் கொள்கை அளவில் மனிதன் ஏற்றுக் கொள்கின்றான். ஆனால், செயல் அதற்கு எதிரானதாக அமைகின்றது. ஈமான் இல்லாததன் காரணமாகவே மனிதன் ஏராளமான தீமைகளை செய்து விடுகின்றான். மேலும் ஏராளமான நன்மைகளைச் செய்ய அவனுக்கு பாக்கியம் கிடைப்பதில்லை.

அல்லாஹ்வின் மீது முழுமையான ஈமான் கொண்ட பிறகு தீமைகளிலிருந்து தப்பிப்பது தொடர்பாக விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது நம்பிக்கை இருக்கும்போதுதான் தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கான நிலையை மனிதன் கடக்க முடியும். அடுத்த கட்டமாக அல்லாஹ்வின் அடியார்கள் மேற்கொண்ட வழிகளை மனிதன் தேடுவதற்கு முயல வேண்டும். முதலில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அடுத்து அல்லாஹ்வின் நல்லடியார்கள் செய்த நன்மைகளை தேட வேண்டும். நபிமார்களும், நல்லடியார்களும், சான்றோர்களும் செய்த நன்மைகளைத் தேட வேண்டும். அதனை செய்ய வேண்டும். அதற்கு ஒரே வழிதான் உள்ளது. அந்த வழியில் நடந்துதான் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மற்றும் நபிமார்கள் அல்லாஹ்வின் அருளிலிருந்து பயன் பெற்றார்கள். அந்த வழியை தேடுவதற்கு அந்த நல்லடியார்களுடன் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை மனிதன் அறிந்து கொள்ள வேண்டும்.

முதலாவது படித்தரம் தீமைகளிலிருந்து விலகுகின்ற படித்தரமாகும். இது இறைவனுடைய கம்பீரமான தோற்றத்தின் மூலமாகவே நிகழ முடியும். அவன் தீயவர்களின் எதிரி ஆவான். தனது நெருக்கமானவர்களின் எதிரிகளை அவன் அழித்து விடுகின்றான். இது முதல் படித்தரமாகும். அடுத்த படித்தரம் என்பது, இறைவனின் அழகிய தோற்றத்தின் வெளிப்பாட்டின் மூலமாக கிடைக்கின்றது. இஸ்லாமிய சொல் வழக்கில் பரிசுத்த ஆவி என்று அழைக்கப்படுகின்ற ஆற்றல் இறைவனிடமிருந்து கிடைக்காத வரை எதுவுமே நடக்காது. இந்த ஆற்றல் என்பது இறைவனிடம் இருந்து கிடைக்கின்ற ஆற்றலாகும். அது இறங்கிய உடன் உள்ளத்தில் ஓர் அமைதி ஏற்படுகின்றது. இயல்பில் நன்மையின் மீது அன்பும், நேசமும் உருவாகி விடுகின்றது. அல்லாஹ்வினுடைய அழகின் தோற்றம் நிகழ்ந்தவுடன் நன்மையின் மீது கவனம் ஏற்படுகின்றது. ஓர் அமைதி உள்ளத்திற்கு கிடைக்கின்றது. இதுவே நம்முன் உள்ள நல்லடியார் –களின் அமல்களாகும். இதனை பார்க்கும்படியே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு அறிவுரை செய்துள்ளார்கள்.

நபிமார்களின் நிலைகளைப் பாருங்கள். எந்த நன்மைகளை மக்கள் மிகக் கடினத்துடன் ஒரு சுமையாக கருதி செய்கின்றனரோ அதனை மகிழ்ச்சியுடனும் இன்பத்துடனும் செய்வதன் பக்கம் நல்லடியார்கள் ஓடுகின்றார்கள். அவர் அல்லாஹ்வின் அன்பிற்குரியவராக இருக்கின்றார். இறைவனுடன் தொடர்பு ஏற்பட்டு விடும்போது அவனுடைய தூய ஆவி அவனுள் இறங்கி விடும்போது பின்னர் நன்மை என்பது புத்தம் புதிய சுவைமிக்க பானமாக இருக்கும். நன்மையினுள் இருக்கின்ற அழகு அவருக்கு காணக் கிடைத்து விடும். அவர் தன்னிலை மறந்து அதன் பக்கம் ஓடுவார். தீமையை சிந்தித்து பார்ப்பதற்கே அவரது உடல் நடுநடுங்கி விடும். இந்த விஷயங்கள் எப்படிப்பட்டவையென்றால் அவற்றை நாம் சொற்களால் விவரிக்க முடியாது. அது உள்ளத்தின் நிலையாகும். உள்ளம் உணர்கின்ற இன்பமாகும். அதனை வார்த்தைகளில் விவரிப்பது மிகக் கடினமாகும். அது உள்ளத்தின் நிலையாகும். உள்ளமே அதனை உணர முடியும். அவ்வாறு உணரும்போதுதான் அதனை சரியாக அறிந்து கொள்ளவும் முடியும். அந்நிலையில் அவருக்கு புதுப்புது ஒளிகள் கிடைக்கும். ஏதோவொரு சமயத்தில் அவருக்கு உருக்கம் ஏற்பட்டு விடுகின்றது என்பதை எண்ணி பெருமை கொள்ளவோ அதையே தனது முன்னேற்றத்தின் உச்சகட்டமாகவோ மனிதன் கருதிவிடக் கூடாது.

தொழுகைகளில் எப்பொழுதாவது அழுது விடுவதையோ அல்லது உருக்கம் ஏற்பட்டு விடுவதையோ தனது முன்னேற்றத்தின் உயர் தரமாக கருதக் கூடாது. இது போன்ற உருக்கம் தற்காலிகமானதாகும். இந்த உருக்கத்தின் உதாரணம் இவ்வாறாகும். பலர் நாவல் படிக்கின்றனர். சில இடங்களை அடையும் போது தன்னிலை மறந்து பலர் அழுது விடுகின்றனர். நாவல் படித்துக் கொண்டிருக்கும் போதே அழுது விடுவர். அப்படிப்பட்ட கதைகள் அதில் வந்து விடுகின்றது. அந்த கதைகள் அனைத்தும் கற்பனையானவை என்று அறிந்திருந்தும் அவர் அழக்கூடியவராக இருக்கின்றார். சில முறை உருக்கம் ஏற்பட்டு அழுது விடுவதே உண்மையான ஆன்மாவின் மகிழ்ச்சிக்கு அடித்தளமாக இருந்தால் ஐரோப்பியர்களைத் தவிர்த்து இன்று உலகில் ஆன்மீக முன்னேற்றத்தைப் பெற்றவர் வேறு எவரும் இருக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் சின்னச்சின்ன விஷயங்களுக்கு கூட உணர்ச்சிவசப்பட்டு அழுது விடுகின்றனர். ஆயிரக்கணக்கான கதைகள் வெளியாகின்றன. லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் அதைப் படித்து அழுகின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 238-240; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) நாடகங்களைப் பார்த்து அழுகின்றனர். பிறருடைய கதைகளைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டு அழுது விடுகின்றனர்.

ஆக, இது ஒன்றும் ஆன்மீக முன்னேற்றம் அல்ல. ஆன்மீக முன்னேற்றம் என்பது தீமைகளிலிருந்து மனிதன் முழுமையான முறையில் விலகி நின்று நன்மைகளை அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டும் முழுமையாக செய்ய வேண்டும். அடுத்து நன்மையின் இரண்டு பகுதிகளை அன்னார் விளக்குகின்றார்கள். முன்னர் தீமைகளை கைவிடுவது, நன்மைகளை மேற்கொள்வது என்ற இரண்டு அம்சங்களைக் கூறி இருந்தார்கள். தற்போது அதன் இரண்டு பகுதிகளை எடுத்துரைக்கின்றார்கள்.

மனிதன் செய்கின்ற நன்மைகளுக்கு இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, கடமைகளான நன்மைகள். மற்றொன்று, உபரியான நன்மைகள். மனிதன் மீது கடமையாக்கப்பட்ட நன்மைகள் முதல் பகுதியாகும். உதாரணமாக, கடனை திருப்பிக் கொடுப்பது. இது மனிதன் மீது கடமையாகும். கடன் வாங்கினால் அதனை திருப்பிக் கொடுப்பதும், தனக்கு நன்மை செய்தவருக்கு நன்மை செய்தலும் கடமையாகும். இந்த கடமைகளைத் தவிர்த்து ஒவ்வொரு நன்மைகளுடனும் உபரியான நன்மைகளும் இருக்கின்றன. அதாவது பாத்தியப்பட்டதை விட கூடுதலாக நன்மை பயப்பது. தனக்கு நன்மை செய்தவருக்கு கூடுதலாக நன்மை செய்வதாகும். இது உபரியான நன்மையாகும். இதன் மூலம் கடமையான நன்மைகளும் முழுமை பெறும். மனிதன் தனது முழுமையான நிலையையும் அடைய முடியும்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

ஒரு ஹதீஸை எடுத்துரைத்து அன்னார் கூறுகின்றார்கள். இறை நேசர்களின் மார்க்க கடமைகளின் முழுமை என்பது உபரியான நன்மைகளின் மூலமாகவே நடக்கின்றது. உதாரணமாக, ஸக்காத்தை தவிர்த்து உபரியான ஸக்காத்தும் அவர்கள் கொடுக்கின்றனர். அது போன்ற மக்களுக்கு அல்லாஹ் நண்பனாகி விடுகின்றான். இன்னும் சொல்லப்போனால், ஹதீஸில் வருகின்றது. அவர்கள் நடக்கின்ற காலாகவும், அவர்கள் பிடிக்கின்ற கையாகவும், அவர்கள் கேட்கின்ற காதாகவும், அவர்கள் பேசுகின்ற நாவாகவும் நான் ஆகி விடுகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 13-14; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) மனிதன் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையில் முன்னேறும்போது அவனது திருப்தியை பெறும் பொருட்டு நன்மையை செய்யும்போதும் அத்தகைய நபருக்கு மேலும் நன்மையைச் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்கி விடுகின்றான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாம் தொடர்பாக அல்லாஹ்வின் இயற்கை சட்டம் என்னவென்றால் ஒரு நன்மையின் மூலம் இன்னொரு நன்மை பிறக்கின்றது. எனக்கு நினைவுக்கு வருகின்றது. நான் தஸ்கிரத்துல் அவ்லியா என்ற புத்தகத்தில் படித்தேன். ஒரு நெருப்பு வணங்கியான 90 வயது முதியவர் மழை பெய்து கொண்டிருந்தபோது தனது வீட்டின் மேல் தளத்தில் ஏறி பறவைகளுக்கு இரை போட்டுக் கொண்டிருந்தார். பல நாட்கள் மழை பெய்து கொண்டிருந்தது. இவர் மேல் தளத்திற்கு ஏறிச் சென்று பறவைகளுக்கு தானியங்களை போட்டுக் கொண்டிருந்தார். ஒரு முஸ்லிம் அவரிடத்தில் கூறினார். முதியவரே! நீர் என்ன செய்கின்றீர்? அதற்கு அவர், சகோதரரே! 6, 7 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து கொண்டிருக்கின்றது. எனவே நான் பறவைகளுக்கு இரை போட்டுக் கொண்டிருக்கின்றேன் என்று கூறினார். அதற்கு நீர் வீணான பணியை செய்து கொண்டிருக்கின்றீர். இதனால் உமக்கு எந்த பயனும் இல்லை. நீர் காஃபிராவீர். உமக்கு எப்படி இதற்கான நற்கூலி கிடைக்கும்? என்று அந்த முஸ்லிம் கூறினார். அதற்கு அந்த முதியவர், எனக்கு நிச்சயமாக இதற்கான நற்கூலி கிடைக்கும் என்று கூறினார். அவருக்கு அல்லாஹ்வின் இருப்பின் மீது நம்பிக்கை இருந்தது.

எவ்வாறிப்பினும், அவரது கூற்று உள்ளத்தின் ஓசையாக இருந்தது. சம்பவத்தின் தொடர்ச்சியாக அவர் கூறுகின்றார். நான் ஹஜ்ஜிற்கு சென்றிருந்தேன். அந்த நெருப்பு வணங்கியாக இருந்த அந்த முதியவர் தவாஃப் செய்து கொண்டிருப்பதை தொலைவில் கண்டேன். அதாவது பறவைகளுக்கு இரை போட்ட அந்த முதியவர் கஃபதுல்லாஹ்வை ஹஜ்ஜில் வலம் வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. நான் அவரை நோக்கி முன்னேறியபோது அவரே முதலில் பேசினார். நான் கேள்வி கேட்பதற்கு முன்பே நான் பறவைகளுக்கு இரை கொடுத்தது வீண் போய் விட்டதா? என்று என்னிடம் கேட்டார். இன்று நான் ஹஜ் செய்து கொண்டிருக்கின்றேன். இது நான் அந்த பறவைகளுக்கு இரை போட்டதற்குரிய நற்கூலியாகும் என்று அவர் கூறினார். ஆக, அல்லாஹ் இவ்வாறே அருளுகின்றான்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: சிந்திக்க வேண்டும். அல்லாஹ் ஒரு காஃபிருடைய நன்மையை கூட வீணாக்குவதில்லை. அவ்வாறிருக்க, ஒரு முஸ்லிமின் நன்மையை வீணாக்கி விடுவானா என்ன?

அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு ஒரு சஹாபியின் சம்பவம் நினைவிற்கு வந்தது. அவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் குஃப்ரான நிலையில் ஏராளமான ஸக்காத்துகளை கொடுத்திருக்கின்றேன். அதற்குரிய கூலி எனக்கு கிடைக்குமா? என்று கேட்டார். நான் காஃபிராக இருந்த போது நிறைய தான தர்மங்களை செய்து வந்தேன். நன்மை செய்ய முயன்றேன். அதற்கு எனக்கு கூலி கிடைக்குமா? என்பது அவரது கேள்வியாகும். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த தான தர்மங்கள்தான் நீர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு காரணியாக அமைந்திருக்கின்றன. அந்த தர்மங்களின் பயனாகவே இன்று நீர் முஸ்லிமாக ஆகி இருக்கின்றீர். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 74-75; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஆகுமான விஷயங்களையும் நடுநிலையோடு பயன்படுத்துவதே நன்மையாகும் என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: உலகின் ஆகுமான இன்பங்களை கூட நடுநிலை பாங்கோடு பெற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக, உண்பதையும் குடிப்பதையும் இறைவன் ஹராமாக்கவில்லை. ஆனால் அதே உண்பதையும், குடிப்பதையும் இரவு பகலாக தொழிலாக ஆக்கிக் கொண்டால் அது தவறாகும். இந்த இன்பங்கள் மனம் எனும் குதிரை சோர்வடையாமல் இருப்பதற்காகவே வைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் உண்பதிலும், குடிப்பதிலும் இன்பங்களை வைத்துள்ளான். அத்துடன் ஆற்றல் கிடைக்க வேண்டும் என்பதையும் இறைவன் நோக்கமாக வைத்துள்ளான். இதன் மூலம் மனிதன் அல்லாஹ்விற்குரிய கடமைகளை செலுத்த வேண்டும் என்பதும் நோக்கமாகும். உண்ணும்போது, உடல் நலம் குன்றி விடக் கூடாது என்ற எண்ணமும் இருக்க வேண்டும்.


இதற்குரிய உதாரணம், ஒரு குதிரை வண்டிக்காரர் நீண்ட தூரம் பயணிக்கின்ற போது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைந்த பிறகு தனது குதிரையின் சோர்வை உணர்ந்து அதற்கு ஓய்வு அளித்து உணவு அளிக்கின்றார். அதன் மூலம் அதன் முந்தைய சோர்வு அகன்று விட வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருக்கின்றது.

நபிமார்களும் உண்கின்றார்கள், குடிக்கின்றார்கள். அதன் மூலம் அவர்களுக்கும் அமைதி கிடைக்கின்றது. அது போன்று திருமண வாழ்க்கை இருக்கின்றன. பிள்ளைகள் இருக்கின்றன. உண்பதும், குடிப்பதும் இருக்கின்றது. இதுபோன்ற உலகியல் விஷயங்களை நபிமார்களும் பயன்படுத்துகின்றனர். நபிமார்களின் நிலை இதைப் போன்றதே ஆகும். ஏனென்றால் உலகத்தை சீர்படுத்துவது என்ற ஒரு மாபெரும் பணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வினுடைய வழிகாட்டல் அவர்களுடன் இல்லையென்றால் அவர்கள் மாண்டு போய் இருப்பார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 374-375; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறு குதிரை வண்டிக்காரர் தனது குதிரையின் சோர்வை அகற்ற ஓய்வு அளித்து உணவளிக்கின்றாரோ அது போன்று நபிமார்களும் உண்கின்றனர். குடிக்கின்றனர். நல்ல பொருட்களை பயன்படுத்துகின்றனர் என்றால் உலகின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஒருவர் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் ஆட்சேபனை செய்தார். மிர்ஸா ஸாஹிப் நெய் சோறு சாப்பிடுகின்றார் என நாங்கள் கேள்விப்பட்டோம் என்று ஆட்சேபனை செய்தவர் கூறினார். முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். நல்ல உணவை உண்பது நபிமார்களுக்கு ஹராமாகும் என்று நான் குர்ஆனிலோ, ஹதீஸிலோ எங்குமே படித்ததில்லையே? அவர்கள் சாப்பிடுகின்றார்கள் என்றால் அதனால் என்ன வந்து விட்டது? என்று கேட்டார்கள். ஆக, இது போன்ற ஆட்சேபணைகள் மக்கள் செய்து கொண்டே இருக்கின்றனர். மிக சாதாரண உணவை உண்பது தான் பெரிய விஷயம் என மக்கள் கருதுகின்றனர். ஆனால் இது தவறாகும். நபி (ஸல்) அவர்கள் நம்முன் நிலைநாட்டிய முன்மாதிரியின்படியே நாம் நடக்க வேண்டும். அன்னார் ஒரு சஹாபியிடம் கூறினார்கள். நான் நல்ல உணவையும் உண்ணுகின்றேன். ஆடையும் உடுத்துகின்றேன். திருமணமும் செய்துள்ளேன்.


B. Mohamed Adil
93632 06679
99433 38000



National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

எனக்கு பிள்ளைகளும் உள்ளனர். நான் உறங்கவும் செய்கின்றேன். இறை வணக்கமும் செய்கின்றேன். எனவே எனது சுன்னத்தின்படியே நீங்கள் வழிநடக்க வேண்டும். (த∴ப்ஸீர் அத்துர்ருல் மன்சூர் தொகுதி 3 பக்கம் 131 த∴ப்ஸீர் சூரத்துல் மாயிதா 78-88. பைருத்திலுள்ள தாரே அஹ்யாவுத் துராஸுல் அரபியில் 2001 -ல் அச்சிடப்பட்டது. )

எவ்வாறிருப்பினும் அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உலகியல் பொருட்களில் நபிமார்கள் மூழ்கி விடுவதில்லை. ஒரு தீயவர் தான் விரும்புவதை உண்கின்றார். தான் விரும்புவதை செய்கின்றார். அதே பணியை ஒரு நல்லடியார் செய்தால் அவருக்கு இறைவனை அடைவதற்குரிய வழிகள் திறக்கப்பட மாட்டாது. உலகியல்வாதி ஒருவர் தான் விரும்புவதை உண்ணலாம். தான் விரும்பியதை செய்யலாம். ஆனால் ஒரு நல்லடியார் அவ்வாறு செய்ய மாட்டார். அவ்வாறு செய்தால் இறைவனது வழிகள் அவருக்கு திறக்கப்பட மாட்டாது. எவர் இறை வழியில் நடக்கின்றாரோ நிச்சயமாக இறைவன் அவருக்கு அருகில் இருக்கின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: اِعۡدِلُوۡا هُوَ اَقۡرَبُ لِلتَّقۡوٰی அதாவது, உண்பதிலும், குடிப்பதிலும் நடுநிலையை பேணுவதின் பெயர் தக்வா ஆகும். விபச்சாரம் செய்வதும், திருடுவதும் மட்டும் பாவம் அல்ல. மாறாக, மனிதன் நடுநிலையை மீறாமல் இருக்க வேண்டும். (மல்∴பூஸாத் தொகுதி 4 பக்கம் 375; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது). ஆகுமான விஷயங்களில் நடுநிலையை பேணுவதுதான் தக்வா ஆகும்.

ஆட்சியாளர்களுடன் எவ்வாறு நடக்க வேண்டும்? பொது மக்களுடன் எவ்வாறு தொடர்பு இருக்க வேண்டும்? என்ற தனது போதனையை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: நமது போதனை என்னவென்றால், எல்லாரிடமும் நல்ல முறையில் நடக்க வேண்டும். ஆட்சியாளர்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் உடமைகளை பாதுகாக்கின்றனர். குடிமக்களின் கடமைகளை சரி வர ஆற்றுகின்ற ஆட்சியாளர்களுக்கு கட்டுப்பட வேண்டும். ஏனென்றால் அவர்கள் மூலம் உயிரும், உடைமையும் பாதுகாக்கப்படுகின்றன. சகோதரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் சகோதரர்கள் மீதும் பல உரிமைகள் உள்ளன. இறையச்சம் இல்லாதவரும், பித்அத்துகளில் மூழ்கியவரும், நமது எதிரிகளுக்கு பின்னாலும் தொழுவது ஆகுமானதல்ல. நிச்சயமாக அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அதற்காக நமது எதிரிகள், நமக்கு எதிராக ∴பத்வா கொடுக்கக் கூடியவர்கள் மற்றும் ∴பித்அத்துகளில் மூழ்கிக்கிடப்பவர் –களுக்கு பின்னால் தொழுவது என்பது ஒருபோதும் நன்மை ஆகாது. ஆயினும், அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அவர் எவ்வளவு நமக்கு எதிரியாக இருக்க வேண்டும். நாம் அவருக்கு நன்மையையே செய்வோம். நமது நடைமுறை என்னவென்றால், எல்லாருக்கும் நன்மை பயக்க வேண்டும் என்பதாகும். எவர் உலகில் ஒருவருக்கு நன்மை பயக்கவில்லையோ அவர் மறுமையில் என்ன நற்கூலியைப் பெறுவார்?

எனவே எல்லாருக்கும் நன்மையை விரும்பக் கூடியவராக இருக்க வேண்டும். ஆயினும் மார்க்க விஷயங்களில் தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறு ஒரு மருத்துவர் இந்துவிற்கும் சிகிச்சை அளிக்கிறார். கிறித்தவருக்கும் சிகிச்சை அளிக்கின்றார். அனைத்து நோயாளிகளுக்கும் அவர் சிகிச்சை அளிக்கின்றார். அது போன்று அதே போன்று நன்மைகள் செய்வதில் பொதுவான விதிகளை பின்பற்ற வேண்டும். நபி (ஸல்) அவர்களின் காலத்தில் கா∴பிர்கள் கொல்லப் –பட்டார்களே என்று ஒருவர் கேட்டால் அதற்கு பதில் இதுவாகும். அவர்கள் முஸ்லிம்களை அநியாயமாக கொலை செய்த குற்றவாளிகளாக இருந்தனர். முஸ்லிம்களை கொலை செய்து வந்தனர். எனவே அதற்குரிய தண்டனையாகவே அது வழங்கப்பட்டது. அவர்கள் குற்றவாளியாக இருந்ததனால் அந்த குற்றத்திற்குரிய தண்டனை கொடுக்கப்பட்டது. அவர்கள் நிராகரித்ததன் காரணமாக மட்டும் தண்டிக்கப்படவில்லை. நிராகரிப்பு சாதாரணமானதாக இருந்திருந்தால் தீங்கு விளைவிக்காமல், துன்பம் தராமல் இருந்திருந்தால் அவர்கள் இவ்வுலகில் தண்டனைக்கு ஆளாகியிருக்க மாட்டார்கள். (மல்∴பூஸாத் தொகுதி 3 பக்கம் 319-320; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது).

நன்மைகளின் வட்டத்தை எந்த அளவுக்கு பரந்ததாக ஆக்க வேண்டும் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னைப் பொருத்தவரை அனுதாபத்தின் வட்டம் என்பது மிகவும் பரந்ததாகும். எந்தவொரு தனி நபரையும் சமுதாயத்தையும் அதிலிருந்து விலக்கி வைத்தல் கூடாது. முஸ்லிம்களிடம் மட்டுமே நீங்கள் அனுதாபத்தை மேற்கொள்ளுங்கள் என்று இன்றைய அறிவீனர்கள் கூறுவதைப் போன்று நான் கூற மாட்டேன். நான் கூறுகின்றேன். நீங்கள் இறைவனுடைய அனைத்து படைப்பினங்கள் மீதும் அனுதாபம் கொள்ளுங்கள். அவர் இந்துவாக இருந்தாலும்; வேறு எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரியே. தனது சமுதாயத்திற்கு மட்டுமானதாக எவர் அனுதாபத்தை ஆக்கிக் கொள்கின்றாரோ அது போன்ற மக்களின் கூற்றை நான் விரும்புவதில்லை. சிலர் ஏமாற்றுவதை ஆகுமானதாக ஆக்கிக் கொள்வதற்கு சில அளவுகோலை உருவாக்கியுள்ளனர். அது முற்றிலும் தவறாகும். அது மாபெரும் பாவமாகும். இது போன்ற மக்களின் கற்பனையிலான விஷயங்கள் பெரும் தீங்கை ஏற்படுத்தி இருக்கின்றது. ஏறக்குறைய அது அவர்களை காட்டுமிராண்டிகளாகவும் விலங்குகளாகவும் ஆக்கி விட்டது.


இன்றைய முஸ்லிம்களின் நிலையும் இதுவே. ஆனால் நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுரை செய்கின்றேன். நீங்கள் ஒருபோதும் உங்களது அனுதாபத்தின் வட்டத்தை குறுகியதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அல்லாஹ் வழங்கிய போதனைக்கேற்ப அனுதாபத்தை மேற்கொள் –ளுங்கள். اِنَّ اللّٰہَ یَاۡمُرُ بِالۡعَدۡلِ وَالۡاِحۡسَانِ وَاِیۡتَآیِٔ ذِی الۡقُرۡبٰی அதாவது, நன்மை செய்வதில் நீங்கள் முதலில் நீதியை கவனத்தில் கொள்ளுங்கள். எவர் உங்களுக்கு நன்மை செய்வாரோ அவருக்கு நீங்களும் நன்மையே செய்யுங்கள். (16:91)

அடுத்த படித்தரம் என்னவென்றால், அவர் செய்த நன்மையை விட அதிகமாக நீங்கள் அவருக்கு நன்மையை செய்யுங்கள். இந்த நிலைக்கு பெயர் இஹ்ஸான் ஆகும். இது அத்ல் என்ற நிலையை விட உயர்ந்த நிலையாகும். இது பெரிய நன்மையாகும். இவையெல்லாவற்றையும் விட மனிதன் இயல்பான அன்பின் உணர்வின் காரணமாக நன்மை செய்ய வேண்டும். தனது நன்மையை காட்டிக் கொள்கின்ற நிலை கூட அங்கிருக்காது.

உதாரணமாக, தாய் தனது குழந்தையை பராமரிக்கின்றார். அந்த பராமரிப்பிற்கு பகரமாக எந்த கூலியையும் அவள் எதிர்பார்ப்பதில்லை. மாறாக, இயல்பிலேயே குழந்தையின் சுகத்திற்காக தனது அனைத்து சுகத்தையும் தியாகம் செய்து விடுகின்ற அன்புமிக்க உணர்வு அவரிடம் மேலோங்கி நிற்கின்றது. எந்த அளவுக்கு என்றால் ஓர் அரசர் நீங்கள் உங்களது பிள்ளைகளுக்கு பாலூட்டாதீர்கள். அதனால் உங்கள் குழந்தைகள் மரணித்து விட்டாலும் உங்களுக்கு எந்த தண்டனையும் தரப்படாது என கூறினால் தாய் தனது குழந்தைக்கு பாலூட்டாமல் இருந்து விடுவாளா என்ன? ஒருபோதும் இருக்க மாட்டாள். மாறாக, தனது மனதில் அந்த தாய் அந்த அரசரை திட்டுவாள். ஏன் இப்படி அரசர் கட்டளையிட்டார் என்று. ஆக, இந்த வழிமுறையில் நன்மை செய்யப்பட வேண்டும். அதனை இயல்பான நிலை வரை சென்றடையச் செய்ய வேண்டும். இயல்பான நிலையை அடைந்து விடும் போது அது முழுமையான நிலையை அடைந்து விடுகின்றது. (மல்∴பூஸாத் தொகுதி 7 பக்கம் 282-283; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆக, நன்மை என்பது உள்ளத்தால் எப்பொழுதும் செய்யப்படுதலாக இருக்க வேண்டும். இயல்பான உணர்வினால் மனித இனத்திற்கு ஆற்றப்படுகின்ற தொண்டின் பெயரே ஈதாயிதுல் குர்பா ஆகும். நீங்கள் முழுமையான நல்லடியாராக மாற விரும்பினால் உங்களது நன்மைகளை ஈதாயிதுல் குர்பா என்ற படித்தரம் வரை அடையச் செய்யுங்கள். இந்த இயல்பான மைய நிலை வரை அடையாத நபர் தனது உயர்தரமான நிலையை அடைய முடியாது. (மல்∴பூஸாத் தொகுதி 7 பக்கம் 283; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**0422-2399980, 4351980**
email: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நினைவில் கொள்ளுங்கள். இறைவன் நன்மையை மிகவும் அதிகமாக நேசிக்கின்றான். தனது படைப்பினங்களுடன் அனுதாபம் காட்டப்பட வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். இறைவன் தீமையை விரும்பி இருந்தால் தீமையை செய்யும்படி கூறியிருப்பான். ஆனால் அல்லாஹ்வுடைய மகிமை இதிலிருந்து முற்றிலும் தூய்மையானதாகும். சுப்ஹான ஹூத்தஆலா ஷானுஹு – அவன் தூயவன்; அவனது மகிமை உயர்ந்தது. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 284; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

நன்மைகளில் அவனது திருப்திக்காக செய்கின்ற பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு தந்தருள்வானாக. மேலும் நன்மைகளில் முன்னேறுவதை அல்லாஹ் நமக்குரிய இலக்காக வைத்துள்ளான். அதனை அடைபவர்களாக நாம் திகழ்வோமாக.

நான் தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா, பேராசிரியர் மஹ்மூத் அஹ்மது ஆத்திஃப் சாஹிப் அவர்களின் மகனாகிய மக்ஸூத் ஆத்திஃப் சாஹிப் முரப்பி அவர்களுடையதாகும். அக்டோபர் 22 அன்று சிறுநீரகம் செயலிழந்ததன் காரணமாக தாஹிர் ஹார்ட் மருத்துவமனையில் ரப்வாவில் 48 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாஹிய ஹஸ்ரத் அப்துர் ரஹீம் தர்த் சாஹிப் அவர்களின் மகள் வழி பேரன் ஆவார்கள். மர்ஹூமின் தந்தை மஸ்வூது அஹ்மது ஆத்திஃப் சாஹிப் 1955 முதல் 1986 வரை தஃலீமுல் இஸ்லாம் ஸ்கூலில் ஆசிரியராக தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார்கள். மர்ஹூம் தனது தொடக்கக் கல்வியை ரப்வாவில் பயின்றார். பின்னர் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். ஜாமிஆவில் நுழைந்தார். 1991 –ல் ஷாஹிது பட்டம் பெற்றார். முதலில் அவர் இராணுவத்தில் சேர விரும்பினார். ஒரு கனவின் அடிப்படையில் கல்லூரியிலிருந்து வெளியேறி ஜாமிஆவில் இடம் பெற்றார். முரப்பியாக அவர் மைதானத்தில் வெளியேறினார். அல்லாஹ்வின் அருளினால் அவருக்கு ஒரு மனைவி மட்டுமல்லாமல் இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். மூன்று பிள்ளைகளும் சிறு பிள்ளைகள் தான். பள்ளியில் கல்வி கற்று வருகின்றனர். அன்னாரின் மகன் குர்ஆன் மனனம் செய்து வருகின்றார்.

மக்ஸூத் ஆத்திஃப் சாஹிப் 1991 –ல் ஜாமிஆவில் இருந்து வெளியேறினார். பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் பணி அமர்த்தப்பட்டார். அதன் பிறகு பிரன்ச் மொழி கற்பதற்காக பல்கலைக்கழகத்தில் பயின்றார். 1997 ஆம் ஆண்டு மே மாதம் ஐவெரி –கோஸ்டில் முபல்லிகாக அனுப்பி வைக்கப்பட்டார். 2002 வரை ஐவெரிகோஸ்டில் தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார். 2016 வரை ஃபுர்கினோ –ஃபாஸோவில் தொண்டாற்றும் வாய்ப்பை பெற்றார். பின்னர் சிறுநீரக பிரச்சனையின் காரணமாக பாகிஸ்தான் அனுப்பி வைக்கப்பட்டார்.

அன்னாரின் மனைவி கூறுகின்றார். நான் ஐவெரிகோஸ்ட் சென்ற போது மிகக் கடின உழைப்புடன் எனக்கு பிரன்ச் மொழியை கற்றுத் தந்தார். அதன் மூலம் லஜ்னாக்களின் விவகாரங் –களையும், லஜ்னாக்களின் தர்பிய்யத்தையும் நான் மேற்கொள்வது அவரது நோக்கமாக இருந்தது. பெரும்பாலும் எழுதக் கூடியவர்கள் அவரைப் பற்றி அவர் எல்லோரிடமும் சிரித்த முகத்துடன் பழகுவார் என்று எழுதியுள்ளனர். மிகவும் புத்திசாலியாக இருந்தார். நகைச்சுவை உணர்வு கொண்டவர். பெரியவர்களையும் தன்னுடைய நண்பர்களையும், தன்னுடன் பணியாற்றுபவர்களையும் மதிக்கக் கூடியவர். கட்டுப்படுதலின் ஆன்மா அவரிடம் மிக அதிகமாக இருந்தது. தன்னலமற்ற மனிதனாக இருந்தார்.

அல்லாஹ் அன்னாரின் தர்ஜாவை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. அன்னாரின் நன்மைகளையும் தொடரச் செய்வதற்கான பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா, அலி செய்யதி மூஸா சாஹிப். தன்ஸானியா அமீர் ஜமாஅத் உடையதாகும். 30 செப்டம்பர் அன்று தனது 66 வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

1950 –ல் அன்னார் பிறந்தார்கள். பின்னர் 1980 –ல் தாருல் இஸ்லாம் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார்கள். பல்வேறு அரசாங்க பதவிகளில் இருந்தார்கள். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அப்பாஸூ மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்கின்ற பணியை இவரிடம் ஒப்படைத்திருந்தார்கள். ஆனால் தனது அரசாங்க பணிகளில் மும்முரமாக இருந்ததன் காரணமாக அன்னார் மிகவும் தாமதித்து விட்டார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள். இந்த வேகத்தில் மொழியாக்கம் நடைபெற்றால் குறைந்தது 30 ஆண்டுகள் ஆகி விடும். மிகவும் தனது கவலையை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்த வழிகாட்டலை கேட்டவுடன் அலி செய்யதி சாஹிப் அவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டார்கள். நான் மிக விரைவாக திருக்குர்ஆன் மொழியாக்கப் பணியை முடித்து விடுவேன் என்று நிய்யத் வைத்தார்கள். அந்த அடிப்படையில் தனது மற்ற அனைத்து பணிகளையும் வேலைகளையும் விட்டு விட்டு தமது முழு கவனத்தை திருக்குர்ஆனின் மொழியாக்கப் பணியில் செலுத்தினார்கள். இவ்வாறு 5 வருடத்தில் அந்த பணியை முடித்தார்கள்.

2006 ஆம் ஆண்டு தன்ஸானியா ஜமாஅத்தின் அமீராக அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். புருண்டி, மொளாவி, மொஸம்பிக் ஜமாஅத்துகளும் அன்னாரின் வசம் ஒப்படைக்கப்பட்டன. இவரது அமாரத் காலகட்டத்தில் ஜமாஅத் ஒரு பள்ளிக் கூடத்தை திறந்து வைத்தது. பெரிய நிலமும் வாங்கியது. மிகவும் நன்றிவுணர்வுமிக்க தூய மனிதர். நல்ல மனிதரும் கூட. கிலாஃபத்துடன் மிகவும் அன்பு கொண்டவராக இருந்தார். மனைவியைத் தவிர்த்து மூன்று மகன்களையும், மூன்று மகள்களையும் தமது நினைவாக விட்டு விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ், அவர்கள் அனைவருக்கும் மர்ஹூமின் நன்மைகளை பின்தொடர்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய நுஸ்ரத் பேகம் சாதிகா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ரப்வாவைச் சார்ந்தவர். அக்டோபர் மாதம் 16, 17 இடைப்பட்ட இரவில் தாஹிர் ஹார்ட் மருத்துவமனையில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் நமது அரபி டெஸ்க்கின் இன்சார்ஜ் அப்துல் முஃமின் தாஹிர் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். ஏகத்துவத்துடன் எல்லையற்ற அன்பும், ஷிர்க் மற்றும் பித்அத்தின் மீது கடுமையான வெறுப்பும் அன்னாரின் தனித்துவ பண்பாகும். தனது நன்மைகளை மறைக்கக் கூடியவராக அன்னார் இருந்தார்கள். மிகவும் பணிவுமிக்கவராக அவர்கள் இருந்தார்கள். அன்னாருடைய பாட்டனார் மியான் அதாவுல்லாஹ் சாஹிப் சஹாபி ஆவார்கள். மவ்லானா புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்கள் மூலமாக அன்னார் பைஅத் செய்தார்கள். காதியானில் வந்து அன்னார் பைஅத் செய்தார்கள். திருக்குர்ஆன் ஓதிக் கொடுப்பதற்கு அன்னாருக்கு மிகவும் ஆர்வம் இருந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்திருந் –தார்கள். அதாவது எழுதப் படிக்கத் தெரியாத முதிய வயதை அடைந்த பெண்களும் திருக்குர்ஆனை ஓத கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தார்கள்.

அந்த அடிப்படையில் 70 வயதை அடைந்த மூதாட்டிகள் கூட அன்னாரிடம் குர்ஆன் கற்றுக் கொண்டார்கள். மாறாக, பலர் அன்னாரிடம் மொழியாக்கத்தையும் கற்றுக் கொண்டார்கள். அஹ்மதி அல்லாத பெண்களும் குழந்தைகளும் கூட அன்னாரிடம் திருக்குர்ஆன் கற்றுள்ளனர். லஜ்னாக்களின் மார்க்க பாடத்திட்டத்தை கூட ஏராளமானனோர் அன்னாரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள். பல கவிதைகளை அன்னார் மனனம் செய்திருந்தார்கள். கலாமே மஹ்மூத், துர்ரே ஸமீன் மற்றும் ஏராளமான கவிதைகளை அன்னார் மனனம் செய்திருந்தார்கள்.

அன்னாருடைய மகன் எழுதுகின்றார்: மஹ்மூத் கி ஆமீன் என்ற கவிதையை மிக வேதனையுடன் அன்னார் படித்து வந்தார்கள். அதை படிக்கும் போது அன்னாரது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடும். அதே போன்று அன்னாரது கிராமத்தில் பித்அத்துகளுக்கு எதிராக பெரும் பணி ஆற்றியுள்ளார்கள். பலகீனமான ஈமான் கொண்ட சில பெண்கள் சில முறை பித்அத்துகளை செய்து வந்தனர். பெரும் ஜிஹாது செய்து அன்னார் அவர்களிடமிருந்து அந்த பழக்கங்களை மாற்றி அமைத்தார்கள். உண்மையான நம்பிக்கையாளராக ஆகுவதன் பக்கம் அன்னார் கவனமூட்டி வந்தார்கள். தொழுகையை மிக உருக்கத்துடன் தொழுது வந்தார்கள். திருக்குர்ஆனை முறையாக ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள். மர்ஹூமா மூஸியாக இருந்தார்கள். அன்னாருக்கு நான்கு பிள்ளைகள். அவர்களில் ஒருவர் நான் கூறியது போன்று மூஃமின் சாஹிப் ஒருவராவார்கள். மற்ற பிள்ளைகளும் வக்ஃப் செய்து ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வருகின்றனர்.

அல்லாஹ் மர்ஹூமாவின் தர்ஜாவை உயர்த்துவானாக. அன்னாரது பிள்ளைகள் அனைவருக்கும் அவர்களின் வழி நடக்கும் பாக்கியத்தை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

# அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம்

✪ ✪ ✪ மவ்லானா அதாவுல் முஜீப் ராஷித் (இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாயிலின் இமாம்) ✪ ✪ ✪

***(ஐந்தாம் பாகம்)***

ஆண்களின் பொருள் தியாகத்தைப் பற்றி கூறிய பிறகு ஜமாஅத்திலுள்ள பெண்களும் கூட இந்த பொருளாதார ஜிஹாதில் ஆண்களுக்கு இணையாக பங்கு பெற்றுள்ளனர் என்பதை விளக்குவது நமது கடமையாகும். இன்னும் சொல்வதென்றால், சில வேளைகளில் ஆண்களை விட பெண்கள் தியாகத்தில் முன்னேறியிருப்பதை காண முடிகின்றது. பள்ளிவாயில்களைக் கட்டுகின்ற சந்தர்ப்பங்களில் எவ்வாறு ஆண்கள் தங்கள் சட்டைப் பையில் உள்ளவற்றை முழுமையாக இறை வழியில் கொடுத்து விட்டனரோ, தங்களது சம்பளப் பணத்தின் கவரைக் கூட பிரிக்காமல் சந்தா செலுத்துவதற்காக அதனை கொடுத்து விட்டனரோ அவ்வாறே பெண்களும் கூட தங்களது விலை மதிப்புள்ள ஆபரணங்களையும் நகைகளையும் மிகவும் ஆர்வத்துடன் சந்தாவிற்காக கொடுத்திருக்கின்றனர். அவர்களது பார்வையில் அப்போது அந்த விலை மதிப்புள்ள நகைகளுக்கு ஓர் அனாவிற்கு சமமான மதிப்பைக் கூட அவர்கள் வழங்காதது போன்று அவர்களது தியாகத்தின் நிலை இருந்தது. திருமணத்திற்காக வாங்கி இருந்த நகைகளின் டப்பாக்களை அப்படியே கொண்டு வந்து காலத்தில் கலீ∴பாவின் கைகளில் அதை கொடுத்து விட்டு முழுமையான மகிழ்ச்சியுடன் அவர்கள் திரும்பி வருகின்ற காட்சியை நம்மால் பார்க்க முடிந்தது. நான் இந்த சம்பவத்திற்கு கண் கண்ட சாட்சியாக இருக்கின்றேன். மான்செஸ்டரில் இலண்டனிலுள்ள பைத்துல் ∴புதூஹ் பள்ளிவாயில் கட்டுவதற்காக பொருள் தியாகம் செய்யுமாறு அறிவிப்பு செய்யப்பட்டபோது அங்கு அமர்ந்து இருந்தவர்களிலிருந்து ஓர் இளைஞர் எழுந்து வந்தார். அவரது கையில் ஒரு கவர் இருந்தது. அந்த இளைஞர் அந்த கவரை தந்தவாறு இப்போது சிறிது நேரத்திற்கு முன்னர்தான் எனக்கு கடந்த மாதத்தின் சம்பளம் கிடைத்தது. நான் சம்பளக் கவரை திறக்கக்கூட இல்லை. பள்ளிவாயில் கட்டுவது தொடர்பாக அறிவிப்பு வந்ததும் அந்த கவரை அப்படியே நான் இதற்காக கொடுக்கின்றேன் என்று அவர் கூறினார்.

இந்த சபையில் இருந்த இன்னோர் இளைஞரின் முன்மாதிரியும் கூட நாம் மறக்க முடியாத ஒன்றாகும். அது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதன் ஒரு சிறந்த உதாரணமாகும். இந்த திட்டம் தொடர்பாக அறிவிப்பு செய்யப்பட்டதும் அவர் எழுந்து வந்தார். ஒரு கவரை வழங்கியவாறு சில நாட்களுக்குப் பிறகு எனக்கு திருமணம் நடக்க இருக்கின்றது. நான் வலிமா விருந்து கொடுப்பதற்காக 500 பவுண்டுகளை சேமித்து வைத்திருந்தேன். இறை இல்லம் கட்டுவது தொடர்பான திட்டத்தைக் கேட்டதும் எனது உள்ளத்தில் வலிமாவிற்கான ஏற்பாட்டை இறைவன் ஏதாவது ஒரு வகையில் செய்து விடுவான். மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக கிடைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தை கை நழுவிப் போக விட்டு விடக் கூடாது என்ற எண்ணம் வந்தது. என் தரப்பிலிருந்து இந்த முழு தொகையையும் பள்ளிவாயில் கட்டுவதற்காக நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

இதே சபையில் நிகழ்ந்த ஈமானுக்கு எழுச்சியூட்டக் கூடிய இன்னொரு சம்பவத்தையும் நான் கூறுகின்றேன். பள்ளிவாயில் கட்டுவதற்கான அருளுக்குரிய திட்டத்தில் அதற்காக வாக்குறுதி வழங்கியிருப்பவர்களின் பட்டியலை நான் பார்த்த போது அதில் எல்லாரது வாக்குறுதியையும் விட அதிகமான தொகையை ஓர் அஹ்மதி பெண் தனது வாக்குறுதியாக எழுதியிருப்பதைப் பார்த்தேன். நான் எனது சொற்பொழிவில் அதை பற்றி குறிப்பிட்டுக் கூறியவாறு ஆண்களுக்கு அது பற்றி கவனமூட்டியவாறு அவர்களது தன்மான உணர்வை தூண்டினேன். அப்போது ஒரு நண்பர் அந்த பெண் எழுதியிருந்த 10 ஆயிரம் பவுண்டுகளுக்கு எதிரில் தான், 15 ஆயிரம் பவுண்டுகளை வாக்குறுதியாக வழங்குவதாகக் கூறினார். அப்போது சில நொடிகளுக்குப் பிறகு அந்த பெண்மணியிடம் இருந்து என் தரப்பிலிருந்து எனது வாக்குறுதியை 20 ஆயிரம் பவுண்டுகளாக எழுதிக் கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டிருந்த ஒரு காகிதத் துண்டு எனக்கு தரப்பட்டது. நான் இது பற்றி அறிவிப்பு செய்ததும் அந்த ஆண் உடனடியாக தனது வாக்குறுதியை 21 ஆயிரம் பவுண்டுகளாக உயர்த்தி விட்டார். ஒவ்வொருவரும் இனி என்ன நடக்கும் என்பதைப் பார்ப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தனர். உடனடியாக அந்த தூய உள்ளம் கொண்ட பெண்ணிடமிருந்து இன்னொரு காகிதத் துண்டு எனக்கு தரப்பட்டது. அதில் எழுதப்பட்டிருந்த விஷயம் எல்லா ஆண்களையும் எதுவுமே பேச முடியாமல் செய்து விட்டது. இப்போது இவ்வாறு மீண்டும் மீண்டும் வாக்குறுதியை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பமே இருக்கக் கூடாது. என் தரப்பிலிருந்து நான் கூறும் இந்த விஷயத்தை நீங்கள் எழுதிக் கொள்ளுங்கள். அதாவது பள்ளிவாயிலைக் கட்டுவதற்காக முழு ஜமாஅத்தில் இருந்து எல்லாரையும் விட அதிகமாக எவர் வாக்குறுதி எழுதினாலும் எந்நிலையிலும் எனது வாக்குறுதியானது அவர் எழுதும் தொகையை விட ஆயிரம் பவுண்டுகள் அதிகமாக இருக்கும் என்று அவர் எழுதியிருந்தார். நன்மைகளில் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுவதில் எத்தகைய பெருமிதம் கொள்ளத்தக்க முன்மாதிரியை இந்த அஹ்மதி பெண்மணி காட்டி விட்டார்.

மதிப்பிற்குரிய முன்ஷி இமாமுத்தீன் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய கரீம் பீவி சாஹிபா அவர்களது உதாரணமும் மகத்துவமிக்க உதாரணமாகும். அவர்களது பொருளாதார நிலைமைகள் மோசமாக இருந்தும் கூட எல்லா சமயங்களிலும் அவர்கள் பொருள் தியாகம் செய்வதற்கான வழிகளைத் தேடிக் கொண்டேயிருப்பார்கள். அதாவது, பொருள் தியாகம் செய்வதற்காக சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும்? அப்போது முதல் முறையாக நாம்தான் தியாகம் செய்ய வேண்டும் என்ற துடிப்பு எல்லா சமயங்களிலும் அவர்களிடம் காணப்பட்டது. அவர்களது அசாதாரணமான தியாக உணர்வு இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகின்றது. அவர்களது வஸிய்யத் தொடர்பாக அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை முழுமையாக செலுத்திய பிறகு தமது சொத்திலிருந்து செலுத்த வேண்டிய பங்கிற்கான தொகையையும் முழுமையாக அவர்கள் செலுத்தி விட்டார்கள். அலுவலகத்தின் தரப்பிலிருந்து நிகழ்ந்த தவறின் காரணமாக அவர்கள் செலுத்திய முழு தொகையும் வேறு ஒரு சந்தாவில் சேர்க்கப்பட்டு விட்டது. ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகே இந்த தவறு பற்றி தெரிய வந்தது. இவ்வாறு தவறாகப் பதிவு செய்யப்பட்டதை சரி செய்யும் வகையில் மிகவும் எளிதாக தாள்களில் திருத்தம் செய்ய முடியும். ஆனால், தூய உள்ளம் கொண்ட இந்த பெண்மணி தான் செலுத்திய தொகையைத் திரும்ப எடுத்து அதற்குரிய சரியான சந்தா கணக்கில் சேர்ப்பதை விரும்பவில்லை. அவர்கள் ஒரு முறை செலுத்திய தனது சொத்திலிருந்து தான் செலுத்த வேண்டிய பங்கிற்கான தொகையை மீண்டும் ஒரு முறை முழுமையாக செலுத்தி தனது கணக்கில் எந்த பாக்கியும் இல்லாமல் செய்தார். (அஸ்ஹாபே அஹ்மது தொகுதி 1 பக்கம் 162)

அல்லாஹ் தனது சிறப்பான அருளாலும் கருணையாலும் ஜமாஅத்திலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருள் தியாகத்தின் களத்தில் அசாதாரணமான முறையில் வியக்கதக்க வகையிலுள்ள முன்மாதிரியைக் காட்டுவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். செல்வந்தர்களுக்கும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இறைவன் அவர்களுக்கு வழங்கி இருந்த செல்வத்திலிருந்து மனம் திறந்து பொருள் தியாகம் செய்தவாறு செலவு செய்து கொண்டே செல்வதற்கான நல்வாய்ப்பை இறைவன் வழங்கியுள்ளான். ஏழைகளும் கூட தங்களது கலப்பற்ற தன்மையுடனும் நல்ல ஆசையுடனும் தியாகங்கள் செய்வதில் எல்லா வகையிலும் பின்தங்கி விடவில்லை. இது பற்றிய எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. அவற்றில் அரிதாக காணப்படுகின்ற ஒரு சம்பவத்தை இப்போது கூறுகின்றேன்:

இது, காதியானின் ஆரம்ப காலத்தில் நடந்த சம்பவமாகும். ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் நடந்த ஓர் ஏழை அஹ்மதி பெண் செய்த தியாகம் தொடர்பாக எனது தாயார் அவர்கள் பல முறை என்னிடம் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சபையில் பொருள் தியாகம் தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். இந்த ஆதரவற்ற ஏழைப் பெண்ணுக்கு செல்வந்தர்கள் தியாகம் செய்து கொண்டே இருக்கின்றனர். ஆனால், எனக்கு அந்த நற்பாக்கியம் கிடைக்காமல் இருக்கின்றது என்ற ஆதங்கம் ஏற்பட்டது. அதனால் அந்த பெண் நிம்மதியிழந்து காணப்பட்டார். மிகவும் நிம்மதியிழந்த நிலையில் அங்கிருந்து எழுந்து அவர் வீட்டிற்குச் சென்றார். வீட்டிலுள்ள எல்லாவற்றையும் விற்று அதன் மூலம் கிடைத்த தொகையை ஆரம்பத்திலேயே அவர் சந்தாவாக கொடுத்திருந்தார். வராந்தாவில் ஒரு கோழி இருந்தது அவரது கண்ணில் பட்டது. அவர் அந்த கோழியைக் கொண்டு வந்து ஹுஸுர் அவர்களிடம் கொடுத்தார். பிறகு நிம்மதியிழந்த நிலையில் வீட்டிற்குத் திரும்பி வந்து மூன்று முட்டைகளை எடுத்துக் கொண்டு வந்து அதையும்

அவர் வழங்கினார். தியாகம் பற்றிய உணர்வு எந்த அளவு அதிகமாக அவருக்கு இருந்தது என்றால் அமைதியாக உட்காருவது அவருக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. அந்த சபையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அவர் எழுந்து மீண்டும் தனது வீட்டிற்குச் சென்று தான் கொடுப்பதற்கு வீட்டில் ஏதாவது பொருள் இருக்கின்றதா என்று பார்வையிட்டார். அந்த பெண்ணின் கணவர் உடைந்து போன ஒரு கட்டிலில் அமர்ந்திருந்தார். கணவர் அவளிடம் இப்போது நீங்கள் என்ன தேடிக்கொண்டிருக் -கின்றீர்கள்? எல்லாவற்றையும் நீங்கள் கொடுத்து விட்டீர்கள். வீட்டில் இப்போது எதுவும் இல்லை என்று கூறினார். தன்னிடம் இருந்த அனைத்தையும் இறைவனின் வழியில் வழங்கி விடுவதாக சபதம் எடுத்திருந்த அந்த பெண் மிகவும் கோபத்துடன் தனது கணவரைப் பார்த்து அமைதியாக இருங்கள். எனக்கு சக்தி இருந்தால் உங்களையும் விற்று அந்த தொகையை சந்தாவாக கொடுத்திருப்பேன் என்று கூறினார். (அஹ்மதிய்யத் னே துன்யா கோ கியா தியா பக்கம் 49)

**முடிவுரை:**

இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் மீது பேரன்பு கொண்டிருந்த இவர்கள் செய்திருக்கின்ற தியாகங்கள் மற்றும் அவர்களது அர்ப்பணிப்பு மனப்பாங்கை எடுத்துக் காட்டுகின்ற ஈமானுக்கு வலுவூட்டுகின்ற முன்மாதிரிகளும் நம்மை தியாகம் செய்வதற்கு அழைக்கக் கூடியவையாக இருக்கின்றன. இந்த சம்பவங்களைப் படித்து விட்டு ஒரு சில நொடிகள் மட்டும் மகிழ்ச்சியாக இருந்து விட்டு அல்லது வியப்பில் ஆழ்ந்து விட்டு இருந்து விடுவது போதுமானது அல்ல. மாறாக, இந்த தூய முன்மாதிரிகளை உங்களது வாழ்விலும் தொடர்ந்து நீடிக்கும் வகையில் நீங்கள் செயல்பட வேண்டும். இந்த வழியில் சென்றவர்கள் தமது இலக்கை அடைந்து விட்டனர். பொருள் தியாகம் செய்கின்ற இந்த வழிகளில் முழுமையான நன்றியுணர்வுடன் முன்னேறிச் செல்ல வேண்டியது நமது கடமையாக இருக்கின்றது. தியாகங்களின் எந்த கொடியை நமது முதாதையர்கள் இறக்காமல் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தனரோ அதனை நாமும் நமது உயிரை அர்ப்பணித்தவாறும் நமது பொருள் -களைத் தியாகம் செய்தவாறும் உயர்த்திப் பிடிக்க வேண்டும். எவ்வகையிலும் அஹ்மதிய்யதிற்கு எந்த ஒரு களங்கமும் அவப்பெயரும் ஏற்படாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உலகம் தற்காலிகமானது; சில நாட்கள் மட்டுமே அது நம்முடன் இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் ஒரு நாள் இந்த தற்காலிக தங்குமிடத்தை பின்னால் விட்டு விட்டு மறுமைக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டியதிருக்கின்றது. நாம் இந்த மறுமை பயணத்திற்காக எந்த பயண உணவை ஆயத்தம் செய்து வைத்திருக்கின்றோம் என்பதை நம்மில் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும், இது நாம் கவலைப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். எவரது மூளையிலாவது எனது சொத்துக்களையும் மாளிகைகளையும் செல்வங் -களையும் நிலங்களையும் நான் உலகை விட்டு விட்டு செல்லும்போது என்னுடன் எடுத்துச் செல்வேன் என்ற எண்ணமிருந்தால் அந்த நபரை விட அறிவற்ற மனிதர் வேறு யார் இருக்க முடியும்? இந்த உலகில் வருகின்ற ஒவ்வொரு நபரும் வெறுங்கையோடுதான் வருகின்றார். வெறுங் கையோடுதான் திரும்பிச் செல்கின்றார். உலகின் இந்த எல்லா செல்வங்களும், பொருளும், எல்லா சொத்துக்களும், இன்னும் சொல்வதென்றால் மனைவி பிள்ளைகள் உறவினர்கள் நண்பர்கள் ஆகிய அனைவரும் இந்த உலகிலேயே இருந்து விடுவர். மரணித்தவருடன் இவ்வுலகில் ஏதாவது ஒரு பொருள் செல்கின்றது என்றால், மேலும் மறுமையில் அவருக்கு ஒரு பொருள் பயன்தரக் கூடியதாக இருக்க முடியுமென்றால் அது அவரது நற்செயல்களேயாகும்.

இந்த நற்செயல்களில் ஏனைய நன்மைகளை தவிர பொருள் தியாகத்திற்கும் ஓர் உயர்வான இடம் இருக்கின்றது. அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள செல்வத்தை மகிழ்ச்சியுடன் அவனது வழியில் நீங்கள் செலவு செய்தவாறு இறைவனின் திருப்தி என்ற செல்வத்தை நீங்கள் பெற்று விட்டால் பிறகு இந்த தியாகம்தான் மறுமையில் மனிதனுடன் அவனது பயண உணவாக அவனுடன் இருக்கக் கூடியதாகும். இதுவே அனைவரும் எழுப்பப்படும் அந்த நேரத்தில் அவனுக்கு துணை நிற்கக்கூடிய உண்மையான செல்வமாகும்.

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எம். ஏ (ரலி) அவர்கள் தமது உருது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக் -கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

### திருக்குர்ஆனிலிருந்து...

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

### திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப்போல)க் கொடுக்கவும், கட்டளையிடுகின்றான்... (16:91)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*தீயவற்றைப் பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. ஆயினும் அநீதிக்கு ஆளானவரைத் தவிர. (அவர்கள் அநீதியை வெளிப்படுத்தலாம்). அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (41:49)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

### திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)**

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்த்த(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 30 November 2017 Issue No. 48

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

சென்று விட்டது. நாங்கள் இறங்கியதுமே ஒரு பாழடைந்த இரயில் நிலயைத்தைப் பார்த்ததும் நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று எங்களுக்கு தெரிந்து விட்டது. அது எத்தகைய பாழடைந்த இரயில் நிலையமாக இருந்தது என்றால் உட்காருவதற்காக அங்கு கட்டில் கூட கிடைக்கவில்லை. உணவிற்கான ஏற்பாட்டையும் அங்கு செய்ய முடியாத நிலை இருந்தது. ஆனால், இந்த சிரமம் ஏற்பட்டதனால முன்னறிவிப்பின் இரண்டாவது பகுதியும் நிறைவேறி விட்டது என்ற எண்ணத்தில் எனக்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்பட்டது என்றால், அந்த இடத்தில் எவரோ எங்களுக்கு பெரும் விருந்தளித்ததுபோன்று இருந்தது. ஒரு வகையில் பார்க்கும்போது எல்லா வகையான சுவையான உணவுகளும் எங்களுக்குக் கிடைத்தது போன்று இருந்தது. இதற்கு பிறகு ஸ்டேஷன் மாஸ்டர் தனது அறையிலிருந்து வெளியே வந்தார். உங்களுக்கு யாரோ தேவையில்லாமல் தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் இந்த சிரமத்திற்கு ஆளாக்கி இருக்கின்றார் என்று கூறி வருந்தினார். மேலும் பாதி இரவு கழிந்ததும் ஒரு சரக்கு இரயில் வரும். அதில் வசதி இருந்தால் உங்கள் அனைவரையும் ஏற்றி விடுவேன் என்று கூறினார். பிறகு இதை பற்றி கேட்டு தெரிந்து கொள்வதற்காக அவர் தந்தி கொடுத்தார். இரயிலில் வசதி இருக்கின்றது என்று அவருக்கு பதில் வந்தது. பாதி இரவு கழிந்த பிறகு நாங்கள் அந்த இரயிலில் பயணம் செய்து லூதியானா வந்து சேர்ந்தோம். ஒரு வகையில் பார்த்தால் இந்த பயணமே அந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்காகவே இருந்தது.

**96 -வது அடையாளம்:** ஒரு முறை லூதியானாவின் தலைவரான மர்ஹூம் நவாப் முஹம்மது அலி கான் அவர்கள், எனது வாழ்க்கைக்கு தேவையான சில விஷயங்கள் அடைபட்டு விட்டன. அவை திறப்பதற்காக நீங்கள் துஆ செய்யுங்கள் என்று எனக்கு கடிதம் எழுதியிருந்தார். அப்போது நான் துஆ செய்ததும் அவை திறக்கப்பட்டு விடும் என்று எனக்கு இல்ஹாம் வந்தது. நான் அது பற்றி கடிதம் மூலம் அவருக்கு தகவல் கொடுத்தேன். ஒரு சில நாட்கள் கழிந்த பிறகு வாழ்க்கைக்கு தேவையான அந்த காரணிகள் திறக்கப்பட்டன. இதனால் அவருக்கு என் மீதுள்ள பற்று மிகவும் அதிகரித்தது. பிறகு ஒரு முறை அவர்கள் தமது சில மறைவான குறிக்கோள்களை அடைவது தொடர்பாக எனக்கு ஒரு கடிதத்தை எழுதி அனுப்பினார்கள். எந்த நேரத்தில் அவர் அந்த கடிதத்தை தபாலில் சேர்த்தாரோ அதே நேரத்தில் இந்த விஷயங்கள் உள்ள கடிதம் அவர்கள் தரப்பிலிருந்து எனக்கு வர இருக்கின்றது என்று எனக்கு இல்ஹாம் வந்தது. அப்போது நான் சற்றும் தாமதிக்கமால் உடனடியாக இந்த விஷயங்கள் உள்ள கடிதத்தை நீங்கள் எனக்கு அனுப்புவீர்கள் என்று அவருக்கு கடிதம் எழுதினேன். அடுத்த நாள் அந்த கடிதம் வந்தது. எனது கடிதம் அவருக்கு கிடைத்தபோது இந்த மறைவான செய்தி எவ்வாறு கிடைத்தது ? ஏனென்றால், என்னைப் பற்றிய இந்த இரகசியமான செய்தி எவருக்கும் தெரியாது என்பதை நினைத்து அவர் வியப்பின் நதியில் மூழ்கி விட்டார். அவரது பற்று எந்த அளவு வளர்ச்சி அடைந்தது என்றால் என் மீதுள்ள அன்பிலும் பற்றிலும் அவர் தன்னையே மாய்த்துக் கொண்டார். அவர் நினைவில் வைத்து கொள்வதற்காக எழுதுகின்ற சிறு நூலில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அந்த இரண்டு அடையாளங்களையும் எழுதினார். எப்போதும் அவற்றை தனக்கு அருகில் வைத்திருந்தார். நான் மேலே குறிப்பிட்டிருப்பது போன்று நான் பட்டியாலா சென்ற சமயத்தில் அமைச்சர் ஸய்யிது முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களை சந்தித்த சமயத்தில் தற்செயலாக அவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது அமைச்சர் அவர்களுடனும், நவாப் சாஹிப் அவர்களுடனும் தொடர்புள்ள எனது வழக்கத்திற்கு மாற்றமான அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் பற்றி சிறிது பேசப்பட்டது. அப்போது மர்ஹூம் நவாப் சாஹிப் அவர்கள் ஒரு சிறு நூலை தமது சட்டைப் பையிலிருந்து எடுத்து அமைச்சர் அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டார்கள். எனது நம்பிக்கை மற்றும் பற்றிற்கு காரணமாக இருந்தவை இந்த இரு முன்னறிவிப்புகளாகும். அதை இந்த நூலில் நான் எழுதியுள்ளேன் என்று அமைச்சரிடம் கூறினார்கள். சில காலம் கழிந்த பிறகு நவாப் சாஹிப் அவர்களின் மரணத்திற்கு ஒரு நாள் முன்னதாக, அவர்களை உடல் நலம் விசாரிப்பதற்காக லூதியானாவிலுள்ள அவர்களது வீட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது அவர்கள் மூல நோயின் காரணமாக மிகவும் பலவீனமாக இருந்து வந்தார்கள். அதிகமாக இரத்தமும் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில் அவர்கள் எழுந்து அமர்ந்தார்கள். உள்ளேயிருந்த தனது அறைக்குச் சென்றார்கள். தனது அதே சிறிய நூலைக் கொண்டு வந்தார்கள். நான் இதனை எனது உயிருக்கு பாதுகாப்பாக வைத்திருக்கின்றேன். அதை பார்க்கும்போது எனக்கு ஆறுதல் ஏற்படுகின்றது என்று கூறினார்கள். அந்த நூலில் இரண்டு முன்னறிவிப்புகளும் எழுதப்பட்டிருந்த அந்த இடத்தையும் காட்டினார்கள். அதற்கு பிறகு ஏறக்குறைய பாதி இரவோ அல்லது அதை விட அதிகமாகவோ கழிந்திருந்த நிலையில் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ அவர்களது நூலகத்தில் இப்போது வரை அந்த நூல் இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 255-258)*

*(10 -வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

“இந்த தங்கமும் செல்வமும் எல்லாம் இந்த உலகிலேயே இருந்து விடும். மறுமையில் நாம் எழுப்பப்படும் நாளில் நமக்கு பயனளிக்கக்கூடிய தங்கத்தை நீங்கள் உருவாக்குங்கள்.”

எனவே, நம்மில் எவரும் உலகில் நாம் சம்பாதித்த செல்வம் மறுமையில் நமக்கு பயன் தரக்கூடியதாக இருக்கும் என்ற தவறான எண்ணத்திற்கு இரையாகி விட வேண்டாம். அழிந்து போகக் கூடிய இந்த செல்வத்தை இறைவனின் வழியில் தியாகம் செய்தவாறு அல்லாஹ்வின் திருப்தியின் நிரந்தரமான, என்றும் அழியாத செல்வத்தைப் பெற்றுக் கொள்பவரே அறிவுள்ள, வெற்றி பெற்ற மனிதராக இருக்கின்றார். அவர் ஒருபோதும் செல்வத்தை செலவு செய்வதன் மூலமாக அதில் குறைவு ஏற்பட்டு விடும் என்ற சந்தேகத்தில் ஒருபோதும் வீழ்ந்து விடுவதில்லை. இது ஷய்த்தான் ஏற்படுத்தக்கூடிய ஒரு சந்தேகமாகும். உண்மை என்னவென்றால், இறை வழியில் செல்வத்தை செலவு செய்வதனால் செல்வம் குறைவதில்லை. மாறாக, நமது கணிப்பிற்கு அப்பாற்பட்ட நிலையில் அது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு ∴பார்ஸி கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைவனின் வழியில் செல்வத்தைச் செலவு செய்வதன் மூலம் ஒருபோதும் எந்த ஒரு நபரும் ஏழையாகி விட மாட்டார். மனிதன் இவ்வழியில் வீரத்துடன் செயல்பட்டவாறு தைரியத்துடன் நிற்கும்போது சுயமே இறைவனே அவருக்கு உதவி செய்பவனாகவும் ஆதரவு அளிப்பவனாகவும் ஆகி விடுகின்றான்.

ரஹ்மானான இறைவனின் அருட்கொடைகள் நிறைந்த சுவர்க்கத்தைப் பெற வேண்டும் என்று விரும்புகின்ற ஒவ்வொருவரும் உண்மையான வாக்குறுதியைக் கூறுபவனாகிய இறைவனின் வாக்குறுதிகள் மீது முழுமையான நம்பிக்கை வைத்தவாறு பொருள் தியாகத்தின் எல்லாக் களங்களிலும் எந்த அளவு மகிமையுடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்றால் இவ்வுலக வாழ்க்கையிலேயே فَادۡخُلِیۡ فِیۡ عِبٰدِیۡ ۙ وَ ادۡخُلِیۡ جَنَّتِیۡ தேர்ந்தெடுக்கப்பட்ட என் அடியார்களுக்கிடையே நுழைந்து விடுக. மேலும் எனது சுவர்க்கத்தில் நுழைந்து விடுக. (89:30-31) என்ற நற்செய்தியை இறைவனிடமிருந்து அவர் செவிமடுக்க வேண்டும். எனது வழியில் தன்னை அர்ப்பணித்து விட்ட எனது அடியார்களே! நீங்கள் ஓடிவந்து எனது திருப்தியின் நிரந்தரமான சுவர்க்கத்தில் நுழைந்து விடுங்கள் என்ற நற்செய்தியை அவர் தமது காதால் கேட்க வேண்டும். அல்லாஹ் நம் அனைவரையும் இத்தகைய நன்மக்களின் அணியில் சேர்த்து விடுவானாக. ஆமீன்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad